விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 15 புதன்கிழமை (28.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130

### சடுதியாக அதிகரிக்கும் கொரோனா
## அனைத்து பாடசாலைகளுக்கும் 30ஆம் திகதி வரை விடுமுறை

(கொழும்பு)

நாட்டில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று பரவல் அபாயம் காரணமாக நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளும் தற்காலிகமாக மூடப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறித்த அறிவிப்பினை நேற்று விடுத் 19

## மரத்திலிருந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு
### அராலி வடக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மரத்திலிருந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி வடக்கு வட்டுக் கோட்டையைச்சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கந்தையா பாஸ்கரன் 19

## வடக்கில் நேற்று நால்வருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி 19

# இலங்கையில் மோசமான அடக்குமுறை ஆட்சி
### வெளிநாட்டு இராஜதந்திரிகளை அழைத்து முறையிட்டார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு) நாட்டு மக்களின் மனித உரிமைகள் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு மிக மோசமான அடக்குமுறை ஆட்சியொன்றை கையாள அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் நேரில் முறையிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## சுன்னாகத்தில் வீதி விபத்து முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் இளவாலையைச் 19

## காதல் விவகாரம் தாயும் மகனும் கடத்தல்
### வடமராட்சி கரணவாயில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் பகுதியில் காதல் விவகாரத்தினால் தாயும் மகனும் கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. 19

## இலங்கையை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்
### நேற்றும் +1111 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மட்டும் +1111 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

இதுவே இலங்கையில் ஒரு நாளில் 19

### கொரோனா உச்சம்
## வெளிநாடுகளுக்கு தப்பியோடும் இந்திய செல்வந்தர்கள்

17ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தை முடக்கும் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை
### அரச அதிபர் மகேசன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தை முடக்கும் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லையென, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். 19

## உருமாறும் வைரஸ் இலங்கையில் கண்டுபிடிப்பு
### இது வேகமாக பரவும் தன்மை கொண்டது

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்திருக்கும் நிலையில் சில பகுதிகளில் உருமாற்றம் பெற்ற கோவிட் வைரஸ் அடையாளம் காண்பட்டுள்ளதாகவும், இது வேகமாக பரவக் கூடிய 19

## யாழில் இரு வேறு இடங்களில் வாள்வெட்டு
### 3 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களில் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்.மிருசுவில் - கெற்பேலி பகுதியில் தோட்டத்திற்கு சென்றுவிட்டு 19

## இந்தியாவை உலுக்கும் கொரோனா வைரஸ்

11ஆம் பக்கம் பார்க்க

## பதின்ம வயது சிறுமியை அழைத்துச் சென்ற இளைஞன்
### முல்லையில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு நகரத்தை அண்மித்த பகுதி ஒன்றில் வசித்து வருகின்ற 12 வயது சிறுமி ஒருவரை 19 வயது இளைஞன் ஒருவர் அழைத்துச் சென்றுள்ளார். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சிமார் கோவில் தலைவர், செயலாளர் கைது

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கோவிட்-19 கட்டுப்பாட்டு சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயத் திருவிழாவை நடத்தியதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் பரவலை ஏற்படுத்த வழிசமைத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தலைவர் மற்றும் செயலாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-03,33)


## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி : | களஞ்சிய முகாமையாளர் 208/16 |
| சம்பள அளவுத்திட்டம் : | 15135-120×10-135×10-17685 |
| தகைமைகள் : | க.பொ.த (சா / த ) கணிதம் வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பள திட்டம் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட துறைப் பதவியில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம். |

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்று 17.04.2021 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் " தலைவர் ", கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச், சங்கம், நாவலர்மடம், கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C-2054)

தலைவர்
கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.



## 31ஆம் நாள் நினைவலைகள்



வினோபா நூலகம்,
வினோபா ச.ச. நிலையம்,
வினோபா கிளை (தெ.கி.ப.நோ.கூ.ச ),
வினோபா முன்பள்ளி ஸ்தாபகர்
திரு. **ஆ. தனபாலசிங்கத்தின்**
அன்பு மனைவி

அமரர்
திருமதி
**பாக்கியலட்சுமி தனபாலசிங்கம்**

அவர்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வினோபா நூலகம்,
நண்பர் குழாம்
வினோபா நகர், கச்சாய்.

(6722)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் தாபனக்கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி **ரேவிகா சுதாகரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்
**அமரர் சதாசிவம் சண்முகநாதன்**
அவர்கள் கடந்த 30.03.2021 அன்று
காலமாகி விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து
கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2048)

தோற்றம் 07.01.1951
மறைவு 30.03.2021

பிரிவுத்துயருடன்..
பிரதேச செயலாளரும் அனைத்து
உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.



## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 23.11.1938
மறைவு 15.03.2021

அமரர்
**அமராவதி தங்கராஜா**

திதி – 29.04.2021

எம் வீட்டின் குலவிளக்கே!
பாசத்தின் உறைவிடமே
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?
உங்களைக் காணாது ஏங்குகின்றோம்.
நாற்பத்தைந்து தினங்கள் ஓடி மறைந்தாலும்
நிழலாய் எம்முடன் வாழ்கின்றீர்கள்.

ஓம் சாந்தி!

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

(C-2049)



## நிலைத்து நிற்கும் நீங்காத நினைவுடன்
## எமது அன்னையின்
## 5ஆவது ஆண்டு நினைவலைகள்



மண்ணுலகில் 1950.07.12
விண்ணுலகில் 2016.04.24

அமரர் **புவனேஸ்வரன் கமலாதேவி** (தேவி)

சிரார்த்த திதி : அபரபக்க துதியை (28.04.2021)

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து நாம்
மாண்புடன் வாழ வழிகாட்டிய எமது தெய்வம்
அமரத்துவம் அடைந்து 5 வருடங்கள்
கடந்தாலும் உங்கள் நினைவலைகள் எம் சந்ததி
உள்ளவரை நிலைத்து நிற்கும் அம்மா.

இல. 807, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(6605)

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதப் பட்டியலில் இன்னமும் புலிகள்

# பிரித்தானியாவின் செயற்பாடு சட்டத்திற்கு முரணானது

## உருத்திரகுமாரன்

(லண்டன்)

**பிரித்தானியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தமிழர்களிடத்தில் ஆதரவில்லையென அந்நாட்டு அரசு தரப்பு கூறிய கருத்து உண்மைக்குப் புறம்பானது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.**

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் பிரித்தானியாவில் வாழும் தமிழர்கள், தங்களது உண்மையான நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதற்கு முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"விடுதலைப் புலிகளை பயங்கரவாதத் தடைப்பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்கும் பிரித்தானிய உள்துறை அமைச்சரின் செயற்பாடு சட்டத்துக்கு முரணானது என தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேன்முறையீட்டு ஆணையகம் தனது முதல் தீர்ப்பில் (ஒக்டோபர் 21-2020) குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் மேன்முறையீட்டு ஆணையகம் தனது 2 ஆம் கட்டத் தீர்ப்பில், விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்குவது குறித்து மீள் பரிசீலனை செய்யவதற்கு, 90



நாட்கள் பிரித்தானிய அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

இவ்வாறு தடையினை நீக்கும் விடயத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், சட்டரீதியான போராட்டத்தின் ஊடாக முதல்கள வெற்றியினையும் கண்டுள்ளது.

ஆகவே குறித்த வெற்றியினை அரசியல் ரீதியான வெற்றியாக்குவது பிரித்தானிய வாழ் மக்களுடைய பொறுப்பாகும்.

மேலும் தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடையினை நீக்கக்கோரும் தமது விருப்பினை பிரித்தானியா வாழ் தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டியது தற்போதைய தேவையாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (நி-4)

# அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல பிரதமரின் கோபம் நல்லதல்ல

## பங்காளிக் கட்சித் தலைவர்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

"அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும்எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செயற்பட வேண்டும்" - இவ்வாறு அமைச்சர்களும் பங்காளிக் கட்சித் தலைவர்களுமான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் ஊடகங்களிடம் கூட்டாகத் தெரிவித்தனர்.

"அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது" என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

"பிரதமரின் இந்தக் கருத்துக்கள் ஆரோக்கியமானவை அல்ல. அரசுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளைக் கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்றே நாம் பிரதமரிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். என்ன முரண்பாடுகள் இருந்தாலும் அதை நேரில் பேசித் தீர்க்கலாம். அதற்கு நாம் தயாராக உள்ளோம்.

அரசை விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எமக்கான கருத்துக்கள், குறிப்பாக பங்காளிக் கட்சிகளுக்குரிய கருத்துக்கள் என்று நூறு வீதம் அர்த்தம் கொள்ளக் கூடாது. இது பொதுவான கருத்துக்களாகவும் இருக்கலாம். எம்மை நோக்கிய கருத்துக்களாகவும் இருக்கலாம். அவரைத் தவறான வழிக்கு



கொண்டு செல்ல முயல்பவர்களுக்கு அவர் தெரிவித்த கருத்துக்களாகவும் இருக்கலாம்.

எனவே, என்ன பிரச்சினைகள் என்றாலும் நாம் பேசித் தீர்க்கத் தயாராக இருக்கின்றோம். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களையும் ஏமாற்றத் தயாரில்லை" என அவர்கள் தெரிவித்தனர். (நி-4)

# புர்காவிற்கு தடை

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

புர்கா உட்பட முகத்தை மறைக்கும் அனைத்து ஆடைகளுக்கும் தடை விதிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றை தடை செய்ய முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின் போது அமைச்சர் சரத் வீரசேகர புர்காவிற்கு தடை விதிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சை ஏற்படுத்தியிருந்த நிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான ஆலோசனை மேற்கொண்ட பின்னரே முடிவு எடுக்கப்படும் என அரசாங்கம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அபாய நிலையில் கொரோனா பரவல்

## சுகாதார தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றானது தற்போது அபாய நிலையை எட்டியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த பயணங்களைத் தவிர்க்குமாறு அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார். இதே வேளை இலங்கையில் இதுவரை 102,376 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4)

# இந்தியாவில் தீவிரமடையும் கொரோனா இறக்குமதிப் பொருட்களில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

இந்தியாவில் கொவிட்-19 பரவல் தீவிரமடைந்துள்ளதால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகப் புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பருப்பு மற்றும் கிழங்கு உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதில் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-4)

# மேலும் 279 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 279 பேர் கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

நாட்டில் கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 94,856 ஆக அதிகரித்துள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### வைரமுத்து தணிகாசலம் (Air force தணிகாசலம்)

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரும் உலக உணவுத்திட்ட ( World Food Programme ) தொழில்நுட்ப உத்தியோகத்தரும்)

அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து தணிகாசலம் (Airforce தணிகாசலம்) நேற்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசரத்தினத்தின் அன்புக் கணவரும் பவானி (கனடா), பாஸ்கரன் (பிரித்தானியா), சுதாகரன் (அல்லையம்பதி), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரஞ்சன் (கனடா), நிவேதினி (பிரித்தானியா), ஜெமலா, அலெக்சான்டார் (கனடா) ஆகியோரின் மாமனாரும் நிவாஸ், நிதர்சா, அருட்குமரன், எழில்குமரன், அஸ்வின்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைகளுக்காக மதியம் 2.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2056)

அல்லையம்பதி,
துன்னாலை.

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பேபி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12•06•1940 | 27•04•2021 |

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பேபி நேற்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - முத்துக்குட்டி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கணபதி - நன்னி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவியும் இந்திராதேவி, மோகனதாஸ், சந்திராதேவி, கமலாதேவி, நிர்மலாதேவி, சீலாதேவி (கனடா) ஆகியோரின் தாயாரும் குணசிங்கம், புஸ்பமலர், இந்திரகுமாரன் (பிரான்ஸ்), மகேந்திரம், சந்திரகுமார் (பிரான்ஸ்), இனதாஸ் (கனடா) ஆகியோரின் மாமியாரும் பகீர்த்தனா, யதுர்ஜா, பதுர்சன், மயிதா (லண்டன்), காஞ்சீவன் (லண்டன்), சோபிதா, கீர்த்திகா, தர்மிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
நாகபூசணி அம்மன். (C-2057)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 – 08 – 1957 | 26 – 04 – 2021 |



### பொன்னுத்துரை அற்புதலிங்கம்

உரும்பிராய் கிழக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அற்புதலிங்கம் (பாண்டி) கடந்த 26.04.2021 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் அஜித் (HNDA - உயர் தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப் பாணம்), தீபக் (பல்கலைக்கழக மாணவன் - ஊவா வெல்லச ), றஹித் (விவசாய போதனாசிரியர் - முல்லைத்தீவு), திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகாலிங்கம் (தாரகா லொறி உரிமையாளர்), வசந்தாதேவி, வதனாதேவி (புத்தளம்), சந்திரலிங்கம் (ஜேர்மனி), செல்வலிங்கம் (லண்டன்), ஜெயலலிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி (புத்தூர்), தயாபரன் (சுவிஸ்), புஸ்பவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் உரும்பிராய் இருளன் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2055)

மடத்தடி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தீபக் : 077 758 8654

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி சொர்ணலிங்கம்(பாலன்)

யாழ்.புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் வரதீவினை பிறப்பிடமாகவும் சுதந்திரபுரம் முல்லைத்தீவினை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல தொழிலதிபர் நல்லதம்பி சொர்ணலிங்கம் (பாலன்) நேற்று முன்தினம் (26.04.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பாக்கியம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பாலாம்பிகை, பாரதியம்மா அவர்களின் பாசமிகு கணவரும் கோடீஸ்வரன்(சிவா- சுகாதார திணைக்களம்), புவனேஸ்வரன் (ஈசன்- அவுஸ்திரேலியா), கோகுலேஸ்வரன் (குட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகலா(ஆசிரியை), ஜெயகௌரி(அவுஸ்திரேலியா), கிருஷ்ண வேணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சற்குணபூபதி, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மயில்வாகனம், பூபாவதி, துரைராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பொன்னையா, நடராசா மற்றும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மா (கணக்கர்) தம்பதியினரின் பாசமிகு மருமகனும் கவிசாளினி, அபிமன்யூ, கனிகா, ரிஷாறினி, அகில், ரக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் சுதந்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-2053)

சுதந்திரபுரம்,
முல்லைத்தீவு.

தகவல்:- குடும்பத்தினர் சார்பாக
து. மோகனராசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் அதிகாரத்தை விட இது பயங்கரமானது

## பகிரங்கமாக எச்சரித்த ரணில்

(கொழும்பு)

**கொழும்பு துறைமுக நகர திட்ட சட்டமூலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டால் வடக்கில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பரப்பு அதிகாரத்தை விட அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என கொழும்பு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



நோர்வேயின் சமாதான உடன் படிக்கையின் மூலம் வடக்கு-கிழக் கில் தனியான மாநிலமொன்றை உருவாக்க பிரபாகரனுக்கு அனுமதி வழங்கியதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

2009 இல் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் தமது சொந்த சட்டம் பொலிஸ் மற்றும் அதற்கான சீருடை என்பவற்றைக் கொண்டிருந்தனர்.

இதேபோல் கொழும்பு துறைமுக நகர சட்டமூலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டால் அது சீன காலனியாக மாறும். பிரபாகரன் வைத்திருந்த பகுதியை விடவும் அதிக சக்தி கொண்டதாக இருக்கும் என ரணில் தெரிவித்தார். (நி-4)

# கைதாவதை தடுக்குமாறு ஹரின் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தான் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக வாக்குமூலம் பதிவு செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வருகை தருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஹரின் பெர்னாண்டோ தான் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரி மனுதாக்கல் செய்துள்ளார். (நி-4)


## அறிவித்தல்

வவுனாவத்தை, துர்காபுரம் தெல்லிப்பளையைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி.சுப்பையா யோகமலர் அவர்களின் 31ஆம்நாள் அந்தியெட்டிநிகழ்வு 02.05.2021 அன்று நடைபெற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

(6718)

T.P:- 076 822 0870

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்.இராசதுரை சறோஜினிதேவி

மலர்வு 27 . 12 . 1941

உதிர்வு 09 . 05 . 2020



எம் முன்னே வாழ்ந்த தெய்வம் மறைந்து
ஆண்டொன்று ஆனதம்மா!
பொன்னும் பொருளும் கொட்டிக் கொடுத்தாலும்
பெற்றவள் அன்புபோல் வருமா?
நம்மைப் பெற்றவளின் தாய் மடியைத் தருமா??
கருப்பைக்குள்ளிலிருந்து நாம் காலால் உதைத்தபோது
விருப்புற்று எம்பாதம் முத்தமிட்ட தாயே!
உடலில் சுமந்து உயிரை பகிர்ந்து
உருவம் கொடுத்த உயிரே!
இரவெல்லாம் விளக்காய் விழித்திருந்து
எமக்காய் ஊண் உறக்கம் துறந்து
மகிழ்ந்திருந்தாய் அம்மா
நீங்கள் இல்லாமல் அரண்மனையாய் இருந்தாலும்
அநாதையாய் தவிக்கின்றோம்
அடிமுடி அறியமுடியாத அற்புதமே!
தாலாட்டி சோறூட்டி வளர்த்த சொற்பதமே!
தினம் தொழுகின்றோம் உங்கள் பொற்பாதமே
இன்மைக்கும் ஏழேழு பிறவிக்கும்
அன்போடு எமை ஆழ்வாய்
என்றென்றும் எழிலோடு எம் நெஞ்சிலே நீங்கள் வாழ்வீர்கள் அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

165, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(6708)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக் கருதி

## பேருந்துகளை அதிகரிக்கவும்

### மாவட்டச் செயலர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

**வெளி மாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றும் அரச ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தியுள்ளதாக மாவட்டச் செயலாளர் க.மகேசன் நேற்று தெரிவித்தார்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்துத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனும் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிகாட்டலில் பேருந்துகளின் ஆசனங்களுக்கு அமையவே பயணிகளை அனுமதிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் அதிகாலை பேருந்து சேவைகளைப் பயன்படுத்துகின்றனர்.



அதனால் ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் என பேருந்துகளில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையைவிட அதிகமானோர் ஏற்றப்படுகின்றனர்.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் அரச ஊழியர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்காக சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தியுள்ளதாக மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார். (5-4-33)

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை லட்சுமணன் தோட்டம் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. ரி. சோமாஸ்கந்தராஜக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## கண்காணிப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர்



(நல்லூர்)

யாழ்.நகர் மற்றும் புறநகர் பகுதிகளின் பிரதான சந்திகளில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை கண்காணிப்பதற்கு இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பிரதான சந்திகளில் நிற்கும் இராணுவத்தினர் முகக்கவசங்களை உரிய முறையில் அணியாதவர்களை எச்சரித்து அவற்றை உரிய முறையில் அணிந்து செல்ல பணித்து வருகின்றனர்.

அத்தோடு பொதுமக்கள் ஒன்று கூடுவதையும் தடுப்பதோடு யாழ்.நகரப் பகுதிகளில் சன நெரிசலை தடுக்கும் செயற்பாட்டினையும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

மக்களின் பாதுகாப்பிற்காகவே இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (5-4-33)

## முதலாம் திகதி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே முதலாம் திகதி யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து ஒப்பனை நிலையங்களுக்கும் விடுமுறை தினம்.

அத்துடன் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமையான விடுமுறை தினம் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் ஆ. உதயசங்கர் அறிவித்துள்ளார். (5-4)




## பிரார்த்தனை செய்யுமாறு மனோ வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொரோனா பேராபத்தில் விழுந்து விட்ட இந்திய மக்களுக்காக, மனிதத்தின் பெயரால் பிரார்த்தனை செய்யுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 130 கோடி சனத்தொகை கொண்ட பாரத தேசம், இன்று கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி அல்லற்படுகின்றது.

எமது நாட்டிலும் இந்த கொரோனா கொடுமை புதிய வீரியத்துடன் பரவி வருகின்றது.

நாட்டின் சுகாதார துறையினருக்கு வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம் இதை நாம் எதிர் கொள்ள வேண்டும். அரசாங்கத்தை பொறுப்புடன் செயற்படுமாறு கூறும், அதேவேளை பொது மக்களாகிய நாமும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில் பாரதம் இந்த கொடுமையிலிருந்து விரைவில் மீள வேண்டும் என்ற நோக்கில் நாம் நமது வீடுகளில் இருந்தபடி பூஜை, பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (5-4)



யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியின் நெறிப்படுத்தலில் கோப்பாய் செல்வபுர கிராமத்தில் நேற்று முன்தினம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் 300 பேருக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. (படம்: சிவசா[illegible])

## 116 ஆவது ஜயந்தி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 116 ஆவது ஜயந்தி விழா இன்று 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும். அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (5-4)



தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மற்றும் வறுத்தலைவிளான் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 700 ரூபாய் பெறுமதியான சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சளி, காய்ச்சல் என்றால் உடன் மருத்துவமனை செல்க

(கொழும்பு)

காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்காமல் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பெற்றோருக்கு றிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் இயக்குநரும் வைத்தியருமான விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இதனால் இது தொடர்பில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)



ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பாவின் முக்கிய நாடுகளின் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

# 260 கைதிகளுக்கு தொற்று இரு வாரங்கள் பார்வையிட தடை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து 260 சிறைக் கைதிகள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு, கைதிகளை பார்வையிடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்கு அழைத்து வரப்படும் புதிய கைதிகள் அனைவரும் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், தொற்றாளர்களாக அடையாளம் காணப்படும் கைதிகள் சிகிச்சைகளுக்காக கந்தகாடு சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (நி-4)

# இலங்கையில் இந்தியர்கள் தனிமைப்படுத்தல் பாதிக்கப்படுவது எம் மக்களே-காவிந்த

(கொழும்பு)

இந்தியர்களை இலங்கைக்குள் தனிமைப்படுத்தி, வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் வர்த்தகம் ஒன்றை சிலர் ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.



இதற்காக இணையத்தளத்தில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அமைய இந்தியர்கள் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்ல வேண்டுமாயின் வேறு ஒரு நாட்டில் தம்மை 14 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்வது அவசியம்.

இதனால், இலங்கையில் உள்ள சிலர் இணைந்து இந்த வர்த்தகத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையால், பாதிக்கப்படுவது இலங்கை மக்களே எனவும் காவிந்த ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# யானை தாக்கி ஒருவர் பலி

(திருமலை)

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)


## வேலையாள் தேவை

யாழ். சிறு விளானில் உள்ள சிறிய பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண் அல்லது பெண் வேலையாள் தேவை.

தொடர்பு

077 138 7671,
077 242 5208
076 558 1081

(6720)



# கேள்வி அறிவித்தல்

## பூநகரி பிரதேச சபை

1. தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, **பூநகரி பிரதேச சபை** தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, பூநகரி பிரதேச சபை, பூநகரி (தொலைபேசி: 0212060855, 0212284572), Email poonakaryps@yahoo.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 30.04.2021 ஆம் திகதியிலிருந்து 14.05.2021 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணிமுதல் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு, பூநகரி பிரதேச சபை, பூநகரி** அவர்களிடமிருந்து 30.04.2021 ஆம் திகதியிலிருந்து 14.05.2021 ஆம் திகதிவரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000.00 (VAT நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு ,பூநகரி பிரதேச சபை, பூநகரி** எனும் முகவரிக்கு 14.05.2021 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்:

| தொ. இல | கேள்விஇல | வேலைவிபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டு தொகை (வற் நீங்கலாக) (Mn) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/KI/POPS/PSDG/2021/05 | Purchase of Street Light | PSDG | 0.807 | 8100.00 | 30.03.2021 |
| 02 | NP/KI/POPS/Council /2021/01 | Purchase of Street Light | Council | 1.63Mn | 16500.00 | 30.03.2021 |
| 03 | NP/KI/POPS/PSDG /2021/04 | Fabricated of steel water tank stand | PSDG | 1.83Mn | 18500.00 | 30.03.2021 |

8. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 05.05.2021 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு பூநகரி பிரதேச சபைக் கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

அருணாசலம் ஐயம்பிள்ளை
தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பூநகரி பிரதேச சபை

(C-2047)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படும் காணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

## பிரதேச செயலாளர்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு துணுக்காய் வாணி மோட்டைக் குளத்தின் கீழுள்ள வயல் நிலங்கள் வனவள திணைக்களத்திடமிருந்து விடுவித்து விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணுக்காய் பிரதேச செயலாளர் ஏ.லதுமீரா தெரிவித்துள்ளார்.**

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புத்து வெட்டுவான் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் காண ப்பட்ட வாணி மோட்டைக்குளம் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டுள்ள போதும் இதுவரை அதன் கீழ் உள்ள வயல் நிலங்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை.

குறிப்பாக இந்த பிரதேசத்தில் 80 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயக் காணிகள் இன்றி வாழ்கின்றன.

அவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தொடர்ச்சியாக இந்தப் பிரதேச மக்கள், பொது அமைப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது, வாணி மோட்டைக் குளமானது புனரமைக்கப்பட்டு இருந்தாலும் விவசாயக் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கீழ் இருப்பதனால் அவற்றை விடுவித்து மக்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (5-4-315)

# வவுனியா வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(குருமன்காடு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துடன் தொடர்பைப் பேணிய வவுனியா மொத்த வியாபாரிகளுக்கு பி.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டத்தையடுத்து அங்கு சென்று வந்த வவுனியாவைச் சேர்ந்த 112 வியாபாரிகளுக்கு நேற்று முன்தினம் காலை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொரோனாவின் மூன்றாம் அலை தொற்றையடுத்து தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியாவில் இருந்து தம்புள்ளைக்கு மரக்கறிகள், பழங்கள் என்பவற்றைக் கொண்டு செல்பவர்கள் மற்றும் தம்புள்ளையில் இருந்து வவுனியாவிற்கு வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்கு வவுனியாவில் உள்ள மரக்கறி மொத்த நிலையத்தில் சுகாதார துறையினரால் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.(5-4-250)

# மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(குருமன்காடு)

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை நடவடிக்கைகள் இரு வாரங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தாக்கம் மீள ஏற்பட்டுள்ளதையடுத்து வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை அமர்வுகள் தற்காலிகமாக இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தவிசாளர் இ.நவரட்ணம் அறிவித்துள்ளார். (5-4-250)

# உரங்களை விநியோகிக்க புதிய பொறிமுறை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உரங்களை வழங்குவதில் கமநல சேவை நிலையங்கள் தற்போது நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக விவசாயிகளை ஒரே தடவையில் கமநல சேவை நிலையங்களுக்கு அழைத்து உரங்களை வழங்குவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

உரங்களை விநியோகிக்கும்போது கூடுதலான விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுக்கு வருகை தருவதன் காரணமாக புதிய பொறிமுறை ஒன்றினை பயன்படுத்தி உரங்களை விநியோகிப்பதற்கான முயற்சிகளில் கமநல சேவை நிலையங்கள் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பான தகவல்கள் கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கமக்கார அமைப்புகளுடன் கலந்துரையாடி உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் கமநல சேவை நிலையங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. (5-350)

# மணல் அகழ்வால் பாதிப்படையும் பயிர்ச்செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ் வினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக் குளத்தின் சூழலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தொடர்கின்ற மணல் அகழ்வினால் வன்னேரிக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை பாதிக்கப்படுகின்றது. வன்னேரிக் குளத்தில் இருந்து அகழப்படும் மணல் ஜெயபுரம் வழியாக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வன்னேரிக்குளத்திற்கு வருகை தரும் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகளிடம் வன்னேரிக்குளத்தில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதனால் எதிர்காலத்தில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட முடியாத அளவிற்கு நிலைமை மாறி வருகின்றது.

மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் இப் பிரதேசம் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத பகுதிகளாக மாறிவிடும். இதனை விட வன்னேரிக் குளம், தேவன் குளம் ஆகிய குளங்களின் அணைக்கட்டுகளுக்கும் ஆபத்துகள் ஏற்பட்டு வருவதாக அப் பகுதி விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. (5-4-350)

# முகக்கவசம் அணியாவிட்டால் சட்ட நடவடிக்கை



(நெளுக்குளம்)

வவுனியாவில் முகக் கவசம் அணியாதவர்களுக்கும் உரிய சுகாதார முறைகளைப் பின் பற்றத் தவறியவர்களுக்கும் எதிராக வவுனியாவில் பொலிஸார் கடும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் நடந்து செல்பவர்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் பயணிப்பவர்கள் உரிய முறையில் முகக் கவசம் அணியாத விடத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா மூன்றாவது அலை பெருக் கெடுக்கத் தொடங்கியுள்ளதை அடுத்து சுகாதாரத்துறையினர், பொலிஸார் பல்வேறு நடவடிக்கையினை மேற் கொண்டு வருகின்றனர. (5-4-299)

# விதி மீறிய செயற்பாடு போக்குவரத்தில் நெரிசல்

(நெளுக்குளம்)

வவுனியா சூசைப்பிள்ளை யார்குளம் வீதியின் இரு பகுதி களிலும் வீதி ஒழுங்குகளை பேணா மல் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா பசார் வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்ட நிலையில் நகருக்கு சென்று வரும் மக்கள் சூசைப்பிள்ளை யார் குளம் வீதியையே மாற்று வழியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த வீதியின் இரு கரைகளிலும் அதிகமான வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்தினை மேற்கொள்வதில் அசௌகரியமான நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை நேரங்களில் அந்த வீதிகளைப் பயன்படுத்துவோர் பெரும் கஷ்டங்களிற்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே குறித்த வீதியில் ஒரு சீரான போக்குவரத்து முறைமையை ஏற்படுத்துவதற்கு வவுனியா நகரசபை மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

28.04.2021
சித்திரை 15, புதன்கிழமை
பிரதமை முற்பகல் 7.35 மணிவரை
துதியை பின்னிரவு 5.10 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.05 மணிவரை
சுபநேரம் 4.28-5.58 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** – ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**கடகம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தாய்வழி உறவில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** – சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** – வாக்கு மேன்மையுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** – பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு** – மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் திட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** – எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

விவேகத்தோடு கொடுப்பவன் நேரடியாகப் பயன்பெறுவான்.

# ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு இல்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

(கொழும்பு)

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க தேவையான ஒட்சிசனுக்கு பற்றாக்குறை இல்லை என இலங்கையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று தெரிவித்தார்.

களுபோவில வைத்தியசாலையில் ஒட்சிசன் பற்றாக்குறை இருப்பதாகவும் நோயாளியின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூர் ஒட்சிசன் உற்பத்தியாளர்கள் தேவையான அளவு ஒட்சிசனை விட அதிகமாக வழங்க உறுதியளித்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (நி-4)

# வெலிசறையில் மீண்டும் கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று முதன் முதலில் ஏற்பட்டபோது அதிகளவில் பாதிக்கப்பட்டது கம்பஹா வெலிசறை கடற்படை முகாம். இங்கு நூற்றுக்கணக்கான கடற்படையினர் கொரோனாத் தொற்றுக்கிலக்காகிய நிலையில் அது வெலிசறை கொரோனாத் கொத்தணி என அழைக்கப்பட்டது.

இந்நிலையயில் மீண்டும் வெலிசறை கடற்படை முகாமிலுள்ள உடற்பயிற்சி பிரிவில் சேவையாற்றி வந்த பயிற்றுவிப்பாளர் ஒருவர் படுக்கையறையிலேயே உயிரிழந்து கிடந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது உடலில் நடத்தப்பட்ட கொரோனாப் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வெளியாகிய தகவலால் அங்கு பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த நபர் விசேட முறைமையில் கடற்படையில் இணைந்து பணியாற்றி வந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# அதிகளவான தொற்றாளர்கள் கொழும்பில்

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் கொவிட்-19 தொற்றுறுதியான 997 பேரில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

173 பேருக்கு கொழும்பு மாவட்டத்தில் கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது. (நி-4)

# சி.சி.ரி.வியில் சிக்கியது பேருந்து கடத்தல்

(கொழும்பு)

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை ஹங்வெல்ல, களுஅக்கல பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் கடத்திச் செல்லப்பட்டிருந்த பேருந்து ஒன்று நேற்று முன்தினம் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சி.சி.ரி.வி.காணொளிகள் மூலம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சப்புகஸ்கந்த பகுதியில் வைத்து குறித்த பேருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தின் முன் பகுதி மற்றும் பின் பகுதியின் நிறம் மாற்றப்பட்டு இலக்கத் தகடும் மாற்றப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

# சர்வாதிகாரப் போக்கிற்கு இலங்கையில் இடமில்லை

(கொழும்பு)

நாட்டில் முதற்கட்டமாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதற்கு பதிலாக, அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை மாத்திரமே தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

ஜனநாயக நாடான இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை ஒழிக்கும் வகையில் சர்வாதிகாரப் போக்கில் எவரும் செயற்பட முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிறேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.



12 இலட்சம் அஸ்டராஜெனெகா தடுப்பூசிகளை கொள்வனவு செய்து அவற்றை 9 இலட்சம் பேருக்கு முதற்கட்டமாக வழங்கியுள்ள போதிலும் தற்போது இரணடாம் கட்டமாக வழங்குவதற்கான வேலைத் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கின்றனர்.

அத்தோடு இவ்வாறு கருத்து வெளியிடுபவர்களின் சமூக வலைத்தளக் கணக்குகளும் முடக்கப்படுகின்றன.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு சகலருக்கும் கருத்துச் சுதந்திரம் காணப்படுகிறது. அதனை ஒழிக்கும் வகையில் சர்வாதிகாரப்போக்கில் எவரும் செயற்பட முடியாது.

நாம் பழிவாங்கும் அரசியலைக் கற்கவில்லை. மக்களின் நலனுக்காக செயற்படுகின்ற சுபீட்சமான நாட்டை உருவாக்கும் அரசியலையே நாம் கற்றுள்ளோம். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## எல்லோருமே கெட்டவர்கள்தான்

ஆனால், மாணவர்கள் அவருடைய பதிலில் திருப்தியடையவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்த குரு, "ரொம்ப சரி! குறை பட்டுக் கொள்கிறவர்கள் மீது நான் விசேஷ கவனம் செலுத்துகிறேன்.

ஆனால், ஒரு நிபந்தனையின் பேரில்தான். ஒரு சின்ன பரீட்சை வைப்பேன். அதில் நீங்கள் தேறியாக வேண்டும்.

"பரீட்சை இதுதான். நீங்கள் அடிக்கடி போய்வருகிற பக்கத்து கிராமத்துக்குப் போக வேண்டும். அங்கிருந்து மிகவும்தகுதியான, எல்லா விதத்திலும் நிறைவான ஒருவரை நீங்கள் அழைத்து வர வேண்டும் அவ்வளவுதான்," என்றார்.



பரீட்சை ரொம்பவும் எளிதாக இருப்பதாக அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அதில் தேறிவிட்டால், குருவின் விசேட கவனம் தங்கள் பக்கம் திரும்பி விடுமே. அவர்கள், தங்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து, பக்கத்து ஊருக்கு அனுப்பினர்,

தகுதியான ஒரு நபரைக் கண்டுபிடித்தும் அழைத்து வருவதற்கு. ஆனால், அவனுடைய துரதிர்ஷ்டம், நல்ல தன்மை உள்ள ஒருவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு குற்றம் குறை இருக்கவே செய்தது.

அவன் நீண்ட நாட்கள் முயன்றும் பலனில்லாமல் போயிற்று. குருவிடம் வந்து, "ஐயனே! நான் தங்களிடம் இப்படிச் சொல்வதற்காக வருந்துகிறேன். அந்த ஊர்முழுக்க தேடிப்பார்த்துவிட்டேன். ஒரு நல்ல மனிதன் கூட கிடைக்கவில்லை. ஒவ்வொருவரும் ஏதாவதொரு தவறைச் செய்தவர்களாகவே இருக்கின்றனர். எல்லாரும் கெட்டவர்கள்!" என்றான் அவன்.

"அட! அப்படியா? இங்கே யார் மீது நீங்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ, அவர்களுடைய அணியில்இருந்து யாரேனும் ஒருவரை அங்கே அனுப்புவோம்," என்றார் குருதேவர்.

(தொடரும்)

# மகாபாரதம்

64



"மகனே! நான் தர்ம தேவன்...நான் உனக்கு தெய்வீகத் தந்தை. நீ உனது கொள்கையில் எவ்வளவு தீவிரமாய் இருக்கிறாய் என பரீட்சித்தேன். உனக்கு வேண்டும் வரம் கேள்" என்றார்.

"தர்மதேவனே! முனிவருக்கு அரணியுடன் கூடிய கடைகோலை தர வேண்டும்" என்றார் தருமர்.

"மானாக வந்து அதைக் கவர்ந்தது நான் தான் இந்தா" என தர்ம தேவன் திருப்பிக் கொடுக்க தருமர் பெற்றுக் கொண்டார்.

"இன்னும்என்ன வரம் வேண்டும் கேள்" என்றார் தர்மதேவன்.

"பன்னிரெண்டு ஆண்டுகள் வெற்றிகரமாக முடிந்த வனவாசம் போல ஓராண்டு அஞ்ஞாதவாசமும் அமைய வேண்டும்" என்றார் தருமர்.

"உங்களை யாரும் கண்டு பிடிக்க முடியாது. நீங்கள் வெற்றி வீரராக திகழ்வீர்கள்" என அருளி தர்ம தேவன் மறைந்தார்.

பாண்டவர்கள் பின் ஆச்சிரமத்தை அடைந்து கடைகோலை முனிவரிடம் கொடுத்து வணங்கினர்.

பின் ஓராண்டு அஞ்ஞாத வாசம் பற்றி திட் [illegible] த்தின் போது உடன் இருந்த முனிவர்களையும், மற்றவர்களையும் அஞ்ஞாதவாசம் இருக்கும் போது உடன் இருக்க முடியாது என்பதால் அனைவரும் தருமரின் வேண்டுகோளை ஏற்று பிரிந்து சென்றனர்.

இனி அட்சய பாத்திரத்தின் தேவையும் இருக்காது என்றாயிற்று.

### விராட பர்வம்

### அஞ்ஞாதவாசம்

ஓராண்டுகால அஞ்ஞாத வாசத்தை எப்படி நிறைவேற்றுவது என ஆலோசித்த பாண்டவர்கள் அதற்கு விராட நாடே ஏற்றது என முடிவு செய்தனர்.

அப்போது அருச்சுனன் தருமரிடம்.. "அண்ணா.., தாங்கள் ராஜசூய யாகம் செய்த மன்னர்..அங்கு போய் விராடனுக்கு பணிந்து எப்படி இருக்க முடியும்?" என்றான்.

அப்போது தருமர் "தம்பி வருந்தாதே கங்கன் என்னும் பெயருடன் துறவுக் கோலம் பூண்டு விராட மன்னனுக்கு ஆசி கூறும் உயர் நிலையில் இருப்பேன்" என்றார்.

பின் ஒவ்வொருவரும் எப்படி மாறு வேஷத்தில் இருப்பது எனப் புலப்படுத்தினார்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிலைமை இதயத்தை நொருக்குகிறது

## உலக சுகாதார அமைப்பு கவலை

(ஜெனிவா)

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் ஏற்பட்டுள்ள பேரவலம் இதயத்தை நொருக்கும் வகையில் அமைந்துள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.**



இந்தியாவில் தினசரி தொற்று நோயாளர் தொகை மூன்றரை இலட்சத்துக்கு அதிகமாகப் பதிவாகி வருகிறது. தினசரி மரணங்களும் 2 ஆயிரத்து 500ஐக் கடந்து பதிவாகி வருகின்றன.

ஒட்சிசனுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதிகளவானோர் உயிரிழந்து வருகின்றனர். அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் அண்மைக்காலமாக கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மருந்து, மருத்துவ உபகரணங்கள் வேண்டி சமூக வலைத்தளங்களில் மன்றாடுவதும் வேதனையளிக்கிறது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு உதவத் தேவையான நடவடிக்கைகளை உலக சுகாதார அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

அவசரகால தேவைக்கான மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4-8)

## விமானங்களுக்கு மே-15 வரை தடை

(கான்பெரா)

இந்தியாவில் கொரோனா 2ஆம் அலை கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

பல நாடுகள் இந்திய விமானங்கள் தங்கள் நாடுகளுக்கு வருவதற்கு தடை விதித்துள்ளன. அந்த வரிசையில் தற்போது அவுஸ்திரேலியாவும் இந்திய விமானங்களுக்கு தடை விதித்துள்ளது.

இந்திய விமானங்கள் அவுஸ்திரேலியா வர மே 15 வரை தடை விதித்தது என பிரதமர் ஸ்கொட் மொரிசன் அறிவித்துள்ளார். (நி-4-8)

## பிரதமருக்கு அபராதம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் கடந்த சில வாரங்களாக கொரோனா வைரஸ் பரவல் வேகம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

அந்தவகையில் நாடு முழுவதும் பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஞாயிறன்று பாங்கொக்கில் தடுப்பூசி கொள்முதல் குறித்து நடந்த ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் பிரயுத் சான் ஓச்சா முகக்கவசம் அணியாமல் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனால் பாங்கொக் நிர்வாகம் அவருக்கு 6 ஆயிரம் பாட் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.14 ஆயிரத்து 270) அபராதம் விதித்துள்ளது. (நி-4-8)

## தடுப்பூசித் திட்டத்தை விரைவுபடுத்தினால் 5 கோடி பேரையாவது காப்பாற்ற முடியும்

(ஜெனிவா)

உலகளவில் உச்சமடைந்துள்ள கொரோனா குறித்து உலக சுகாதார அமைப்பு முக்கிய விடயமொன்றை முன்வைத்துள்ளது.

சர்வதேச அளவில் தடுப் பூசி செலுத்தும் பணிகளை வேகப்படுத்துவதன் மூலம், குறைந்தது ஐந்து கோடி பேரின் உயிர்களைக் காக்க முடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனாவுக்கு மாத்திரமே உலக நாடுகள் அதிகம் முக்கியத்துவம் அளித்து வருவதால் அம்மை, மஞ்சள் காய்ச்சல் போன்ற கொடிய நோய்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அம்மை, மஞ்சள் காய்ச்சல் போன்ற பல உயிருக்கு ஆபத்தான நோய்களை நாம் தவிர்க்க வேண்டுமானால், ஒவ்வொரு நாட்டிலும் கொரோனா தவிர மற்ற வழக்கமான தடுப்பூசி செலுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். இதன்மூலம் 2030 வரை ஐந்து கோடி பேரைக் காக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (நி-4-8)

## கொரோனாவின் கையில் சிக்கித்தவிக்கும் இந்தியா

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 23 ஆயிரத்து 144 பேருக்கு கொவிட் 19 தொற்று றுதியாகியுள்ளது.

இதற்கமைய அங்கு இதுவரை தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடி 76 இலட்சத்து 36 ஆயிரத்து 307 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் 2 ஆயிரத்து 771 பேர் இந்தியாவில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, இந்தியாவில் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 894 பேர் இதுவரையில் தொற்றினால் உயிரிழந்தனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-4-8)

# அஸ்ட்ராஜெனெகா உற்பத்தியாளர்களுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் சட்ட நடவடிக்கை

(பெல்ஜியம்)

அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசி உற்பத்தியாளர்களுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தமது தடுப்பூசி விநியோக உடன்படிக்கையை மதிக்கவில்லை எனவும், உரிய நேரத்தில் தடுப்பூசிகளை விநியோகிப்பதற்கான நம்பகமான திட்டங்களை குறித்த உற்பத்தியாளர்கள் கொண்டிருக்கவில்லை என தெரிவித்தும் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நடவடிக்கை அடிப்படையற்றது என அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேநேரம், தடுப்பூசி விநியோகத்தில் பிரித்தானியாவுக்கு முன்னுரிமை வழங்குவதாக வெளியிடப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய கருத்துக்கும், அஸ்ட்ராஜெனெகா [illegible]




கொரோனா வைரஸ் தடுப் பூசிகளை விநியோகிப்பதில் இருதரப்பினருக்கும் இடையில் நீண்டகாலம் சர்ச்சை ஏற்பட்டு வரும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நடவடிக்கை மேலும் அதனை தீவிரப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுளளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 136 635**

**தொற்று :-148 581 460**

**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# சோம்பு/பெருஞ்சீரகம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name:**
**Pimpinella anisum**
**Family: Apiaceae**
**Engl: Ani seed**
**Sinh: Maha-duru**

75 செ.மீ.வரை உயரமாக வளரக்கூடிய ஓராண்டு செடியாகும். சுனை போன்ற அமைப்புகள் செடியில் காணப்படும். ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. இதன் உலர் கனிகள் வெண்ணிறத்துடன் கலந்த சிறிது பச்சை நிறமுடையது. நீண்டவுரு அமைந்தது, மணமுள்ளது. இலங்கையிலும் வளரக்கூடிய மண்வளம் உள்ளது. ஆனாலும் இந்தியாவில் எங்கும் பயிராகும்.

இதனுடைய பூக்கள், உலர் கனிகள் மருத்துவப்பண்புகள் நிறைந்தவை.

இதன் உலர் கனியில் வாசனைக்குரிய **Volatile oil** காணப்படுகிறது. அதாவது **anethal** மற்றும் **Methyl chavicol** முக்கியமாகக் காணப்படுகிறது.

இதன் உலர் கனிகள் மணமுடன் கூடிய கார்ப்பும் இனிப்புசுவையும் தட்பமான வீரியமும் கார்ப்பு விபாகத்தையும் கொண்டது. இந்தியாவில் வட இந்தியாவில் பயிர்ச்செய்கை அதிகம். இதைவிட பாரசீகம், ஐரோப்பாவின் நடுநாடுகள், இலங்கையிலும் ஓரளவு பயிரிடப்படுகிறது.


சமையலில் வாசனைக்காக சோம்பை பயன்படுத்தினாலும் பல்வேறு மருத்துவப் பண்புகளைக் கொண்டது.

உடற் பருமனைக் குறைக்க சோம்பு நீர் பயன்படுத்தலாம். உடலைச் சுத்தப்படுத்தும் தன்மையும் உண்டு.

பெருஞ்சீரகம் 8 கிராமை 200 மில்லி குளிர்ந்த நீரில் இரவு முழுவதும் ஊறவிட்டு அதிகாலையில் பருகிவர உடல் எடையைக் குறைக்கும்.

ஆனால் தாமதமாகவே உடல் எடையை குறைத்துக் கொண்டுவரும். ஆனால் தினமும் குடித்துக் கொண்டு வரலாம்.

பெருஞ்சீரகம் ஒரு தேக்கரண்டி எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிடும் போது அதி உயர் குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்தும். எப்படி எனில் பெருஞ்சீரகத்தை வாயில் போட்டு மென்று சாப்பிடும் போது உமிழ் நீரில் நைதரேற்றின் அளவு, சுரப்பு அதிகரிக்கிறது. இது இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. இதனால் இரத்த ஓட்டம் சீராகி இரத்த அழுத்தத்தை சீராக்க உதவுகிறது.



சீரண மண்டலத்தை சீராக்க சோம்பை வாயில் போட்டு மென்று சாப்பிட வேண்டும்.

சிறுநீர் பெருக்கியாக சோம்பு தொழிற்படுவதால் உடம்பில் நீர்த்தேக்கத்தைக் குறைக்கிறது.

சிறுநீர்த் தாரையில் ஏற்படும் தொற்றுக்களைக் குறைக்கக் கூடியது.

சோம்பு ஆனது நார்ச்சத்தை அதிகமாகக் கொண்டுள்ளதால் இரத்தத்திலுள்ள நச்சுக்களை நீக்கி இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மையும் உண்டு.

எனவே உணவில் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

சோம்பை ஒழுங்காக எடுக்கும் போது பசியை உண்டு பண்ணும் தன்மையுண்டு. அதி. கமாக இந்தியா போன்ற நாடுகளில் ஏற்றுமதியாகும் வாசனைப் பயிர்களில் சோம்பும் ஒன்றாகும். சோம்பில் பொட்டாசியம் சத்து காணப்படுவது இரத்த அழுத்தத்தை சீராக்கி அத்துடன் பெருஞ்சீரகத்தில் இருக்கும் நிரம்பாத கொழுப்பமிலங்களும் இரத்தத்திலுள்ள நச்சுக்களை அகற்றி இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியது.

இதில் காணப்படும் உயிர்ச் சத்துக்கள், கனிமங்கள் ஆகியன தோலை மிருதுவாக வைத்திருக்கவும் புற்றுநோய் வராமல்தடுக்கவும் உடற்சூட்டை தணித்து, கண்பார்வையை கூர்மையாக்கி முகப்பருக்கள் வராமல் தடுக்கக்கூடிய நன்மைகளைக் கொண்டது. நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்தக் கூடியது.

உணவில் தொடர்ந்து பயன்படுத்தும் போது செரிமானத்தை சீராக்கி மலச்சிக்கலையும் தடுக்கக்கூடியது. குடற்புண்கள் வராமல் சீராக்கக்கூடியது.

வெயில் காலங்களில் உடற்சூடு அதிகமாக இருப்பவர்கள் 1/2 - 1 தேக்கரண்டி அளவு பெருஞ்சீரகத்தை வாயில் போட்டு மென்று சாப்பிடலாம். தாய்ப் பாலையும் கூடுதலாக சுரக்கச் செய்யும்.

மாதவிடாய்க் காலங்களில் அடி வயிற்றில் வலி ஏற்படும் போது ஒரு தேக்கரண்டி பெருஞ்சீரகத்தை வாயில் போட்டு மென்று சாப்பிட்ட பின்பு 200 மில்லி வெந்நீர் அருந்த வேண்டும்.

மேலும் இருமல், சளி, பருவ கால மாற்றங்களால் ஏற்படும்.



அஸ்மா போன்றவற்றை குணமாக்கும்.

7 கிராம் (ஒரு மேசைக்கரண்டி) பெருஞ்சீரகத்தில், கலோரி 23, புரதம் 1 கிராம், காபோவைதரேற்று 3 கிராம், நார்ச்சத்து 1 கிராம், இரும்புச்சத்து 13%, மங்கனீஸ் 7%, கல்சியம் 4%, மக்னீசியம் 3%, பொஸ்பரஸ் 3%, பொட்டாசியம் 3%, செம்பு 3%.

**"யோனி நோய் குன்மம் உரு ட்சைமந் தம்பொருமல் பேன முறு காசம் பீலி கமிரைப் - பீன உரை சேர்கின்ற வாத முபோஞ் சீர் பெரிய சீரகத்தால் மூக்குநோ யில்லை மொழி"**

சோம்பானது கருவாய் நோய்கள், வயிற்றுவலி, காய்ச்சல், செரியாமை, வயிற்றுப்பொருமல், இருமல், இரைப்பு, குரற்கம்மல், மூக்குநீர் பாய்தல் ஆகியவற்றை நீக்கும்.

பெருஞ்சீரகத்தை இளவறுப்பாக வறுத்து பொடித்து வேளை ஒன்றுக்கு 1-2 கிராம் அளவு பனைவெல்லத்துடன் சேர்த்து காலை, மாலை சாப்பிட மேற்கூறிய நோய்களை நீக்கும் தன்மையுண்டு.

பெருஞ்சீரகம், வெந்தயம் இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுக்க வயிற்றுப்புண், வயிற்றுவலி குணமாகும்.

ஒரு மண்சட்டியை எடுத்து பெருஞ்சீரகத்தைப் போட்டு கற்பூரவள்ளிச்சாற்றில் ஊற வைத்து சூரிய ஒளியில் சுவற விட்டு உலர்த்திப் பொடித்து தினமும் 2 கிராம் அளவில் சாப்பிட்டு வந்தால் சளி, பீனிசம், ஆஸ்துமா போன்ற நோய்கள் குணமாகும்.

பெருஞ்சீரகம், பார்லியரிசி, மஞ்சள் மூன்றையும் சம அளவாக எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 50 மில்லி காலை, மாலை எடுக்க சிறுநீரை பெருக்கி சிறுநீரக தொற்றுக்களையும் நீக்கும்.

பெருஞ்சீரகம், எள்ளு, மிளகு மூன்றையும் சம அளவாக எடுத்து ஒரு வாணலியில் தனித் தனியாக சிறிது வறுத்து பொடித்து வைத்துக் கொண்டு தினமும் காலையில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்துவர இரத்தத்தை விருத்தி செய்வதுடன் இரத்தத்திலுள்ள நச்சுக்களையும் நீக்கும். வெண்குட்டம் இருப்பவர்களும் இதனைப் பயன்படுத்தலாம்.

பெருஞ்சீரகம், சோகப்பட்டை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் அளவு தினம் ஒரு வேளை 7 நாட்கள் சாப்பிட்டுவர மாதவிடாய்க் கால்த்தில் ஏற்படும் அடி வயிற்று வலி, கூடுதலான இரத்தப் போக்கையும் கட்டுப்படுத்தும்.

அசைவ உணவுகளை மேலும் செரிமானத்திற்கு கஷ்டமான உணவுகளைச் சாப்பிட்டால் சாப்பிட்ட பின்பு ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் செரிமானத்தை சீராக்கி குடற்புற்று நோய்கள் வராமல் தடுக்கவும் செய்யும்.

சோம்பை சோம்பு தேநீர் மாதிரி தயாரித்து பருகி வந்தால் குடலை சீராக தொழிற்பட வைப்பதுடன் இரத்த ஓட்டத்தையும் சீராக வைத்திருக்க உதவும். உடலில் உள்ள பிடிப்புகளைச் சீராக்கும்.

**சோம்புத் தேநீர்**

பசுப்பால் - 200 மில்லி
சோம்பு - 11/2 தேக்கரண்டி
ஏலம் - 3
இஞ்சி - ஒரு துண்டு
சீனி - தேவையான அளவு

அடுப்பில் பாத்திரத்தை வைத்து பாலை ஊற்றி சிறிதளவு நீரும் சேர்த்து சோம்பை சிறிது வறுத்து தட்டிப் போட்டு பாலில் சேர்க்கவும். இறுதியாக ஏலத்தை வறுத்து பொடித்து சேர்த்து இஞ்சியையும் தோல் சீவி இடித்து சேர்த்து கொதிக்க வைத்து வடித்து பருகலாம். இப்படி பயன்படுத்து வதாலும் இதன் மருத்துவக் குணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிறும் கொரோனா கொத்தணிகள்; எச்சரிக்கிறார் மருத்துவ நிபுணர்

(கொழும்பு)

**நாட்டில் ஏராளமான கொரோனாத் தொற்று கொத்தணிகள் உருவாகி வருவதாக தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது,

பல கொத்தணிகள் தோன்றியுள்ளமையால் தொற்று நோய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் நாடு முழுவதும் நோய் பரவுவதற்கான அறிகுறியாக இதை பார்க்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் சுகாதார விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் சமூக இடைவெளியினை முறையாக பின்பற்றுமாறும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை கொரோனா பரவல் காரணமாக மேல், வடமேல் மற்றும் திருகோணமலை கல்வி வலயப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அரசியல் உரிமை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவேன்-சாணக்கியன்



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும் வரையில் தமிழ் மக்களின் உரிமைக்காக பாராளுமன்ற உறுப்பினராகவும் இளைஞராகவும் தொடர்ந்து போராடுவேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 44 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடியில் மாபெரும் இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் தந்தை செல்வாவின் தமிழ் மக்களுக்கான போராட்டத்தை மூன்றாவது தலைமுறை யாகவும் முன்கொண்டு செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கொரோனா தடுப்பூசியின் 2ம் கட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் இன்று புதன்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, சுகாதாரப் பிரிவினருக்கு முதலில் அதனை வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸினை செலுத்துவதற்கு தேவையான தடுப்பூசிகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொவிட்டை இல்லாதொழிக்க தடுப்பூசி மட்டுமே தீர்வு

## சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொவிட்-19 இன் புதிய மாறுபாட்டிற்கு எதிராக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் நன்கு பயன் தருவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் சுகாதார ஊழியர்கள் உட்பட 9 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு ஏற்கனவே அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் முதல் தடுப்பூசி பெற்றவர்கள் யாருக்கும் இதுவரை கொவிட்-19 இன் புதிய மாறுபாடு பரவவில்லை. ஆனால் எதிர்காலத்தில் அவர்கள் தொற்றுநோயை எதிர்கொள்ள நேரிட்டால் அவர்களுக்கு ஏற்படும் ஆபத்து மிகக் குறைவாக இருக்கும்.

இன்று உலகில் கிடைக்கும் அனைத்து தடுப்பூசிகளும் மாற்றப்பட்ட பதிப்புகள் உட்பட உலகில் இருக்கும் கொவிட்-19 இன் அனைத்து வகைகளுக்கும் நன்கு பதிலளிப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

"அதனால் தான் அனைவருக்கும் தடுப்பூசி போடுவது மிகவும் முக்கியமானது, தடுப்பூசிகள் மட்டுமே வழி" என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வலி இல்லாத வசூல்!

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தாராம். அவர் நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று திட்டம் போட்டார். தனக்காக சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. தன்னுடைய நாட்டுக்காக சம்பாதிக்க வேண்டும் என்று நினைத்தார்.

அரசாங்க கருவூலத்திலே கையிருப்பு குறைந்ததாக இருந்தது. மக்களிடம் வரி விதித்தாக வேண்டும். வேறு வழியில்லை.

ஆனாலும் அந்த ராஜா மக்கள் கஷ்டப்படக் கூடாது என்று நினைக்கின்றவர். மக்கள் வரியையும் கட்ட வேண்டும். அதேநேரத்தில் அவர்கள் சிரமப்படவும் கூடாது. இதற்குத் தகுந்த மாதிரி ஒரு திட்டம் போட்டார். அதன்படி அந்த நாட்டிலே மூன்று பெரிய குளங்களைத் தோண்டினார். அது நிறைய தண்ணீரை நிரப்பினார். அதன் பின்பு எங்கேயோ தேடிப் பிடித்து மூன்று விதமான மீன்களை கொண்டு வந்தார். அந்த மூன்று குளங்களிலேயும் விட்டார்.

ஒவ்வொரு குளத்திலேயும் ஒவ்வொரு விதமான மீன்கள். அந்த மீன்களுக்கு அபூர்வமான சக்தி. அது எப்படி என்றால் அந்தக் குளத்திலே குளிக்க வருபவர்களுக்கு அந்த மீன்கள் கடிக்கும் போது வலி ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக மகிழ்ச்சி நிறைந்த ஒரு இனிமையான உணர்வை அவர்கள் அனுபவித்தார்கள். அது எப்படி என்றால் முதல் குளத்திலே இருந்த மீன்களால் கடிக்கப்படும் போது ஒரு விதமான இன்ப மயக்கத்திலே திளைத்திருக்கின்ற மாதிரியான உணர்வு.

இரண்டாவது குளத்திலே இருந்த மீன்களால் கடிக்கப்படும் போது மக்கள் கால்கள் தரையில் படாமல் ஆகாயத்திலே மிதப்பது மாதிரியான உணர்வை அனுபவித்தார்கள்.

மூன்றாவது குளத்திலே இருந்த மீன்களால் கடிக்கப்பட்டவர்கள் தாங்கள் கோடீஸ்வரர்களாக மாறிவிட்டது மாதிரியான உணர்வை அனுபவித்தார்கள். இப்படி இருந்தால் மக்கள் அந்த குளங்களில் வந்து குளிப்பதற்கு ஆசைப்படாமல் இருப்பார்களா? மக்கள் கூட்டம் அலைமோத ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு குளத்தின் கரையிலேயே கியூ வரிசையில் வந்து நிற்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த நாட்டு மன்னர் என்ன செய்தார் என்றால் ஒவ்வொரு குளக் கரையிலேயும் ஒரு இராஜாங்க அதிகாரியை உட்கார வைத்தார்.

ரிக்கெட்டை அடித்துக் கொடுத்தார். குளிக்க வருபவர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை கட்டணமாக வசூலிக்க ஆரம்பித்தார். அவ்வளவு தான்.... அரசாங்க கருவூலம் நிரம்ப ஆரம்பித்துவிட்டது. இராஜாங்கத்திற்குத் தேவையான பணம் கிடைத்து விட்டது. இது ஒரு கதை.

இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? மக்களுக்கு சுமை தெரியாமலே வரி வசூலிப்பது நல்லது தானே என்று நினைப்பீர்கள்.

ஆனால் இன்றைக்கு உலகத்திலே பல அரசாங்கங்கள் இதே மாதிரி மூன்று குளங்களை வெட்டி வைத்திருக்கின்றது. மக்களும் அதிலே வந்த குளித்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். அது எப்படி என்று கேட்கின்றீர்களா?

அந்த முதல் குளம் தான் சினிமா தியேட்டர். அதிலே குளிக்கின்றவர்கள் தான் ஒரு விதமான இன்ப மயக்கத்திலே திளைத்திருக்கின்ற மாதிரியான உணர்வை அனுபவிப்பார்கள்.

இரண்டாவது குளம் தான் சாராயக்கடை. இந்தக் குளத்திலே குளிக்கின்றவர்கள் தான் கால்கள் தரையில் படாமல் ஆகாயத்திலே மிதப்பது மாதிரியான உணர்வை அனுபவிப்பவர்கள்.

மூன்றாவது குளம்– லொட்டரி ரிக்கெட். இதிலே குளிப்பவர்கள் தாங்கள் கோடீஸ்வரர்களாக மாறிவிட்டது போன்ற உணர்வை அனுபவிப்பவர்கள்.

இன்றைக்குப் பல நாடுகள் இந்தக் குளங்களைப் பயன்படுத்திக் கொண்டு தான் வருகின்றார்கள்.

ஒரு பூவிலே வண்டு வந்து உட்காருகின்றது. அதிலே இருக்கின்ற தேனை வண்டு எடுக்கின்றது. இந்த சமயத்திலே அந்த பூவுக்கு வலிப்பதில்லை. அந்த பூவுடைய மலர்ச்சியும் வளர்ச்சியும் குன்றிப் போவதும் இல்லை. ஒரு ராஜா மக்களிடம் வரி வசூல் செய்யும் போது மக்களுக்கு சிரமமும் தெரியக் கூடாது. அதே நேரத்தில் அதனால் அவர்கள் வாழ்க்கையும் கெட்டுப் போகக் கூடாது. அது மாதிரி வரி வசூல் செய்ய வேண்டுமா? இது காளிதாசனின் இரகுவம்சத்தில் காணப்படும் ஒரு கருத்து.

ஒரு சின்னக் குழந்தை தவறுதலாக ஒரு 25 சதம் நாணயத்தை விழுங்கி விட்டது. காசு வயிற்றுக்குள்ளே போய் விட்டது. அந்தக் குழந்தையினுடைய தாய் உடனே குழந்தையைத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு புறப்பட்டார். அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒருத்தர் என்ன விபரம் என்று கேட்டார். அதற்கு அந்தத் தாய் விபரத்தைச் சொன்னார்.

உடனே இப்படிக் கொடுங்கள் உங்கள் குழந்தையை என்று வாங்கினார். ஒரு கையிலே அந்தக் குழந்தையினுடைய கால் இரண்டையும் பிடித்து தலைகீழாக தூக்கிப் பிடித்தார். இன்னொரு கையால் அந்தக் குழந்தையினுடைய வயிற்றிலே குறிப்பாக ஒரு இடத்திலே தட்டினார்.

உடனே அந்தக் காசு குழந்தையினுடைய வாய் வழியாக வெளியே வந்து விழுந்தது. காசை எடுத்துக் கொண்டு இந்தாருங்கள் உங்கள் குழந்தை என்றார். நன்றி நிச்சயமாக நீங்கள் ஒரு வைத்தியராகத்தான் இருக்க வேண்டும்... என்னுடைய யூகம் சரிதானே? என்றார் அந்த அம்மா. அதற்கு இவர் இல்லை யம்மா நான் ஒரு வருமான வரி அதிகாரி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 25 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



12. உலகத் தேவாலயத் திருச் சபை, யாழ். கிறிஸ்தவ சங்கத்தின் மூலமாக ரூ. 1.5 இலட்சம் ரொக்க மாகத் தந்தது மட்டுமல்லாமல் புத்தகங்களையும் 100 புத்தக இறாக்கைகளையும் கொடுத்து உதவி யமைக்கு.

13. லயன் கழகம் மற்றும் றெட் பார்ணா (RED BARNA) அமை ப்புகள், சிறுவர் சிறுமியர் பகுதிக்குத் திருத்த வேலை செல்வதற்கான பங்களிப்புச் செய்தமைக்கும், அத்துடன் நொறாட் (NORAD) அமைப்பு தாராள அன்பளிப்பாக ரூ. 332, 580.00 கொடுத்தமைக்கும்.

14. நூலக சபையின் உறுப்பின ர்கள்-கே.நேசையா, வண.சுவாமி ஜே.ஏ.பிரான்சிஸ் யோசேப், ஈ. சபா லிங்கம், எச். எம். ஷாகுல் ஹமிட், எஸ்.தியாகராஜா, எம். மயில் வாகனம், கே. முருகரத்தினம், எஸ்.முருகவேல், எஸ்.அம்பி கைபாகன், திருமதி. ஆர்.இரத் தினா நவரத்தினம் மற்றும் என். சபாரத்தினம் ஆகியோர் திட்டத்தில் அயராது உழைத்தமைக்கு.

15. நூலகர் மற்றும் அவரது ஊழியர்கள் வகை வாரியாகப் பிரித்தும் பட்டியல் இட்டும் புத்தக ங்களை அடுக்கியும் பொது மக்க ளுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்தமைக்கு.

16. யாழ். மாநகரசபை அதிகா ரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகி யோர் திட்டத்தில் ஈடுபாடு காட்டியும் பங்களிப்புச் செய்தமைக்கு.

17. வி.சச்சிதானந்தன். முன்னை நாள் வேலைத்தளப் பொறியிய ளாளர், ஆரம்பகாலத்தில் வரைதல், திட்டமிடல், அளவிடல் முதலிய வேலைகளில் ஈடுபட்டமைக்கு. ஈ.வைத்திலிங்கம், சிலகாலம் ஆலோசனைப் பொறியியலாள ராகப் பணிபுரிந்தமைக்கு. 1983 ஒக்டோபர் மாதம் முதல் திட்டத்தில் சிரத்தையுடன் ஈடுபட்டு வதிவிடப் பொறியியலாளராகப் பணிபுரிந்த மைக்கு என். நடேசனையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர வேண்டும்.

18. கட்டட ஒப்பந்தக்காரர் ஏ. ஜெய ராஜா, நிர்மாண வேலைப்பாட்டின் போது மட்டுமல்ல, அர்ப்பண சிந்தையுடன் ஆர்வத்துடன் கட்டட வேலையை முடித்துக் கொடுத்த மைக்கும். அவரின் ஊழியர்களும் விசேடமாகக் குறிப்பிட வேண்டிய வர்கள். அவர்கள்திட்டத்தில்ஆர்வ த்துடன் பணிபுரிந்து உரிய காலத் தில் பூர்த்தி செய்தமைக்கு.

19. கடல் கடந்த நாட்டிலுள்ளவர் களும் இத்திட்டத்தில் பங்கு கொண்டு பணமாகவும் பொருளா கவும் அன்பளிப்புச் செய்தார்கள். அவுஸ்திரேலியத் தமிழ்ச் சங்கம், லண்டன் தமிழ் பேசும் மக்களின் நிலையியர் குழு, திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை போன்ற பிரித் தானியாவிலுள்ள பெரிய தமிழ் அமைப்புகள், பிரான்ஸ் தேசத் தமிழ் அமைப்புகள், நோர்வே நாட்டுத் தமிழ்ச் சங்கம் மற்றும் ஜேர்மனி, ஸாம்பியா, நைஜீரியா, நைரோபி, புருணை, நோர்வே, பொட்ஸ் வானா, ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, தமிழ்நாடு மற்றும் பல நாடுகளில் வாழுகின்றவர்கள் எல் லோரும் பங்களிப்புச் செய்தமைக்கு.

20. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான தமிழ் நாட்டின் அரசாங்கம், அதன் நிதியமைச்சர் வி. ஆர். நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர் வீ.அரங்கநாயகம், தமிழ்நாடு பொது நூலகங்களின் பணிப்பாளர் ஆகியோர் இந்திய ரூ. 5 இலட்சம் பெறுமதியான புத்த கங்களை அன்பளிப்புச் செய் தமைக்கு.

21. இலங்கையின் இந்தியத் தூதராலயம் - சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வரைக்கும் புத்தகங் களை ஏற்றிச் செல்லும் பணிக்கு உதவியமைக்கு.

22. அமெரிக்கத் தூதரும், பிரிட்டிஷ் தூதரும் தந்துதவிய புத்தகங்களுக்காக.

23. இங்கேயும், வேறிடத்திலும் குறிப்பிடாமல் விடுபட்டுப்போன அனைவருக்கும் அவர்கள் ரொக்க மாகக் கொடுத்த பண அன்பளிப் புக்கும் புத்தகங்களை நன்கொடை செய்தமைக்கும்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்
21. 05. 84.

### புனரமைக்கப் பெற்ற நூலகத் திறப்பு விழா

புனரமைக்கப் பெற்ற நூலகம் மீண்டும் பொது சன உபயோக த்துக்காக 1984 ஆம் ஆண்டு யூன் மாதம் நான்காம் நாள் திறந்து வைக்கப்பட்டது. திறந்த வெளியில் மாநகரசபை ஆணை யாளர் சீ.வீ.கே. சிவஞானம் ஒழு ங்கு செய்த திறப்பு விழா வைபவத்துக்கு பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பிரமுகர் கள் மற்றும் பொதுமக்கள் அநேகம் [illegible] னர்.

புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா 1984 யூன் நாலாம் திகதி காலையில் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது. பிரதம விருந்தினர் அமிர்தலிங்கத்தை நூலக வாயி லிலிருந்து சிவஞானம் மற்றும் நூலகக்குழு உறுப்பினர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோர் நூலக மண்டபத்திற்கு அழைத்துச் சென் றனர். நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆயர் அதி. வண கலாநிதி வ. தியோகுபிள்ளை ஆகி யோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் பாராளு மன்ற உறுப்பி னருமான அமிர்த லிங்கம் நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்தோடு, பிரதான மண்ட பத்தின் வாயிலில் நாடாவை வெட்டி திறப்பு விழாவை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம் தமிழ்த்தாய் வணக்கம் பாடினார். நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அதி. வண. ஆயர்

**புனரமைக்கப் பெற்ற நூலகத் திறப்பு விழா**
பிரதான மண்டபத்தின் வாயிலில் நாடாவை வெட்டி திறப்பு விழாவை திரு.அ.அமிர்தலிங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்



கலாநிதி தியோகு பிள்ளை, அஷ்ஹாஜ் பீரான் மொகிதீன் ஆலிம் ஆகியோர் ஆசியுரை வழங் கினார்.

இதன் பின்னர் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் பேசினார். அமிர்தலிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுப் பேசிய பேச்சு குறிப்பிடத் தக்க ஒன்று.

1983 ஆண்டு தென்னிலங்கைத் தெருக்களில் உயிரோடு தமிழ் மக்கள் கொளுத்தப்பட்டனர். உலகம் அதிர்ச்சியடைந்தது. ஆனால், அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் [illegible] நடைபெற்ற நூல்நிலை [illegible] பண்பாட்டுக் கொலை.

கற்றோர் உள்ளத்திலெல்லாம் இலங்கையை ஆளுவோரைப் பற்றி நிச்சயம் உயர்ந்த கருத்தை ஏற்படுத்தி யிருக்க முடியாது.

"அந்தத் தீயினால் தமிழ் மக்களின் உள்ளங்களில் தமது நிலை பற்றியி ருந்த அறியாமை எரிக்கப்பட்டது. அவர்கள் மூட்டிய தீயிலிருந்து புடம் போட்ட தங்கமாக, புதுப்பொலி வோடு யாழ்ப்பாண நூல்நிலையம் மீண்டும் எழுந்து வருகின்றது. இதற்காக யாழ். மாநகர முதல்வர் இராஜா விசுவநாதனைப் பாராட் டுகிறேன்.

"இத்தனை துன்பங்களுக்கும் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட நூல கம் இனிவருங்காலத்திலாவது இந்தத் தகனக்கிரிகைகளுக்கு உட்ப டாது இருக்கவேண்டும். இதுவே யாழ்ப் பாண மக்களின் உள்ளங்களில் உலாவரும் ஆதங்கமும் ஆசையு மாகும். தந்தை செல்வா சொன்னது போல தமிழ் மக்களை ஆண்ட வன்தான் காப்பாற்ற வேண்டும். என்று கூறினார்.

பிரதம அதிதியின் பேச்சைத் தொடர்ந்து, விழா நினைவு மலர் வெளியிடப்பட்டது. நூலகக்குழுவின் சிரேஸ்ட உறுப்பினர் பேராசிரியர் கு.நேசையா, கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்திற்கு முதலாவது மலரை வழங்கி வெளியிட்டு வை த்தார். இதனைத் தொடர்ந்து நூலக கட்டட வரைபடத்தை இலவசமாக வரைந்துதவிய கட்டடக் கலைஞர் வி.எஸ். துரைராஜாவுக்கு, அ.அமி ர்தலிங்கம் தங்கப் பதக்கம் சூட்டி னார். கட்டடத்தை துரிதகதியில் முடித்த ஒப்பந்தக்காரர் ஜெயரா ஜாவுக்கு அ.அமிர்தலிங்கம் பொன் னாடை அணிவித்து பாராட்டினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளில் தொங்கியபடி அரசியல் செய்கின்றனர்

## ஜே.வி.பியை சாடும் அலிசப்ரி

(கொழும்பு)

நாடுமுன்னேறுவதைஜே.வி. பியும் வேறு சில தரப்பினரும் விரும்பவில்லை.

அதனாலே அவர்கள் சில பிரச்சினைகளில் தொங்கிக் கொண்டு அரசியல் செய்வதாக நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

நாடு முன்னேற்றமடைந்து பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் கடந்த 20, 25 வருடங்களாக அரசியல் செய்து வரும் அவர்களின் அரசியல் வாழ்வு நிறைவடைந்துவிடும் என்று அவர்களுக்கு தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார ஆணைக் குழு சட்டமூலத்தை பிசாசு போல காண்பித்து அரசியல் இலாபம் பெற எதிரணி முயற்சிக்கிறது.

துறைமுக நகரத்தினூடாக வெளிநாட்டு முதலீடுகள் அதிகளவில் கிடைக்கும். பல நாடுகள் இவ்வாறு தான் முன்னேறியுள்ளன.

நாட்டின் அனைத்து சட்டங்களுக்கும் உட்பட்டதாக இந்த நகரம் செயற்படும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த துறைமுக நகரம் பெரும் வாய்ப்பாக இருக்கும். இந்த நிலையிலே ஜே.வி.பியும் சில தரப்பினரும் இதனை எதிர்க்கின்றனர் என நீதி அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்

### விரதங்கள்

## மார்கழி பாவை நோன்பு



(தொடர்ச்சி...)

**பகவத்கீதை உபதேசித்த மாதம்**

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருஷேத்திர யுத்தம் நடந்தது. அப்போது போர்க்களத்தின் எதிர்முனையில் ஆசிரியர்களும் உறவினர்களும் இருப்பதைக் கண்ணுற்ற அர்ச்சுனன், போரிட விருப்பமின்றி கையில் இருந்த காண்டீபம் என்ற வில்லை கீழே வைத்து விட்டான்.


அதை அர்ச்சுனனின் தேரில் சாரதியாக இருந்த கிருஷ்ணன் பார்த்து "கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே" என்ற புகழ்பெற்ற கீதையை உரைத்தார். அதன்மூலம் அர்ச்சுனனின் மனதை மாற்றி அவனைப் போரில் ஈடுபடச் செய்தார். கீதை உருவான மாதம் மார்கழி என்பது பெருமைக்குரியது.

**அக்கார வடிசல் பிரசாதம்**

ஆண்டவனுக்குப் பக்தர்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேற பல்வேறு நைவேத்தியங்களைச் செய்து வழிபடுகின்றனர். பெருமாளுக்கு மார்கழி மாதத்தில் அக்கார வடிசல் நைவேத்தியமாகப் படைத்து வழிபடுவது சிறப்பு.

அக்கார வடிசல் என்றால் என்ன? அக்காரை என்றால் சர்க்கரை அடிசல் என்பது குழைய வெந்த சாதம். பார்க்க சர்க்கரைப் பொங்கல் போல இருந்தாலும் சர்க்கரைப்பொங்கலுக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. பச்சரிசி, பருப்பு, வெல்லம், ஏலக்காய், பச்சைக் கற்பூரம், பால், நெய் ஆகியவற்றைச் சேர்த்து செய்வார்கள்.

அரங்கனே தனக்கு மணவாளனாக வந்தால் நூறு அண்டாவெண்ணெயும் நூறு அண்டா அக்கார வடிசலும் நிவேதனமாகப் படைப்பதாக ஆண்டாள்



"கடமையை செய்...பலனை எதிர்பாராதே" அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் "பகவத் கீதை" உபதேசம்.

அழகர் கோவில் பெருமாளிடம் வேண்டிக் கொண்டாள்.

அவர் மனம் போலவே அரங்கன் அவருக்கு மாலை சூடி தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொண்டார். மார்கழி மாதத்தில் பெருமாளுக்கு அக்கார வடிசல் செய்து வணங்கினால் கேட்டது கிடைக்கும். வாழ்க்கையும் இனிக்கும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் 108 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியதற்காக நேற்று முன்தினம் 108 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதைத் தெரிவித்தார்.

இதேவேளை ஒக்டோபர் 30 முதல் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியதாக இதுவரை 3 ஆயிரத்து 755 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## மேலும் இரு பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

நாட்டில் மேலும் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் பொலநறுவை மாவடட்த்தின் ஹிங்குரக்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறிகெத கிராம உத்தியோகத்தர் பிரிவும் மாத்தளை மாவட்டம் உக்குவளை பிரதேசத்தின் பல்லேகும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவும் நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (நி-4)

## போலி நகை தொழிலகம் சுற்றிவளைப்பு-இருவர் கைது

(அநுராதபுரம்)

போலி நகை தயாரிக்கும் நிறுவனம் ஒன்று பியகம பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பியகம, வல்கம பகுதியில் குறித்த நிறுவனம் முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. மல்வானை மற்றும் அநுராதபுரம் பகுதிகளைச் சேர்ந்த 48 மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 120 |
| தக்காளி | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 140 | 260 |
| பூசணி | 60 | 60 | 50 |
| புடோல் | 140 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 220 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 180 | 160 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 200 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 90 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 120 | 240 |
| முள்ளங்கி | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 30 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டுத் தலங்களில் 50 பேருக்கே அனுமதி

# நடைமுறையை இறுக்கமாக்குங்கள்-அரச அதிபர்

(நல்லூர்)

**வழிபாட்டுத்தலங்களில் சுகாதார நடைமுறைகளை மேலும் இறுக்கமாக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமை கவலையளிப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய கொரோனா நிலைமையில் அரசாங்கத்தினால் புதிய சுகாதார நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த சுகாதார நடைமுறை முன்னெடுக்கப்படுகிறது.

எனவே ஆலயங்களில் 50 பேருக்கு மேல் ஒன்றுகூடுவதைப் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடை முறையினைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது எனத் தெரிவித்தார். (5-4-33)



பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நேற்று தெல்லிப்பழை மற்றும் நெல்லியடியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். (படம்:-ரவிசாந், மகாலிங்கம்)

## மன்னாரில் 2,578 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(மன்னார்)

மன்னாரில் 11 ஆம், 12 ஆம், 13 ஆம் கட்டை பிரதான வாய்க்கால்கள், அடைக்கல மோட்டை பிரதான வாய்க்கால், சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால், பெரிய உடைப்பு பிரதான வாய்க்கால் என்பவற்றின் கீழ் 2,578 ஏக்கரில் இம்முறை சிறுபோன நெற்செய்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடலின் போது தீமானிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக குருவில் வான் வாய்க்கால் ஊடாக 400 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல உர விநியோகங்கள், விதை நெல் விநியோகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் கால்நடை கட்டுப்பாடுகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கால்நடை வளர்ப்பாளர்களினால் கால்நடைகளின் கட்டுப்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்ளாத பட்சத்தில் அதற்கான சட்ட நடவடிக்கை களும் மேற்கொள்வது என குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (5-4-285)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2297

### சுரேந்தன்

வீட்டில் சாப்பிட அப்பளம் வைத்தார்கள். கூடவே உருளைக்கிழங்கு மசாலா வைத்தார்கள். அப்பளத்திற்கு எதற்கு உருளைக்கிழங்கு மசாலா வைக்கிறீர்கள் என்று கேட்டேன். உள்ளே இருந்து பூரிக்கட்டை பறந்து வந்தது. அப்போதுதான் புரிந்தது ஓ...அது பூரியா

### சசிகலா

மனைவி:-எங்க போறீங்க...?
கணவன்:- தற்கொலை பண்ணிக்க



மனைவி:- கூடவே பை கொண்டுபோ, திடீரென்று முடிவை மாத்திக்கிட்டா, வர்றப்போ வெங்காயமும் தக்காளியும் வாங்கிட்டு வா...

### அஜந்தன்

நடுராத்திரி எழுந்து தண்ணி குடிக்க போகும் போது...




### குமார்

பசங்க எல்லோரும் நர்ஸ்ஸ கல்யாணம் பண்ணிக்கோங்க...



முன்னபின்ன தெரியாதவர்களையே நல்லா பார்த்துக்குறாங்க. புருஷன நல்லா பார்த்துக்க மாட்டாங்களா...?

### கஜேந்திரன்

தூங்கும் போது கல்யாண கனவு கண்டால் திருமணம் நடக்காது.



இது என்னடா புது புரளியா இருக்கு... எனக்கு படுத்த உடனே அந்தக் கனவு தானேடா வருது...

### சுயா

பிரச்சினைக்கு சிறந்த ஆயுதம் பொறுமை தான்.
பொறுமை அனைத்திற்கும் பதில் தரும்.
அதற்கு காலதாமதம் ஆகும்.
ஆனால்...ஒருபோதும் தோற்றுப்போகாது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை செய்ய நமக்குக் கிட்டும் வாய்ப்புகளே, நம் திறமைகள்!

– காட்டன் மேதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எடுக்கின்ற தீர்மானத்தின் வலிமை தலைமைத்துவத்தின் தகைமை

இலங்கையில் கொரோனாத் தொற்றின் அபாயம் அதிகரித்து வருவதை மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளாவிட்டால், நிலைமை மோசமாகி விடும் என்ற எச்சரிக்கையையும் மருத்துவ சமூகம் விடுத்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சரியான தீர்மானங்களை எடுப்பதில் நாட்டின் அரச தலைமைத்துவம் தத்தளிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

உண்மையில் தலைமை, தலைமைத்துவம் என்பது தேவையான நேரத்தில் சரி யான தீர்மானத்தை சடுதியாக எடுப்பதாகும்.

இருந்தும் எங்கள் நாட்டில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அடிக்கடி மாற்றத் துக்கு உள்ளாகின்றதெனும்போது, சரியான கணிப்பீடுகளும் மதிப்பீடுகளும் இல்லை என்பதை உணர முடியும்.

இதற்கு மேலாக, ஒவ்வொரு தீர்மானத்தை எடுக்கும்போதும் ஏதோவொரு உள்நோக்கம் இருப்பதுபோல அல்லது தீர்மானம் எடுப்பவர்களிடத்து பதட்டமான மனநிலை இருப்பது போன்ற தோற்றப்பாட்டை உணர முடிகிறது.

ஆம், கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக தனியார் கல்வி நிறுவனங்களின் இயங்கு நிலைக்குத் தடை விதித்த அரசாங்கம், பாடசாலைகள் விடயத்தில் மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்குவதெனவும் ஏனைய பாடசாலைகள் இயங்கும் எனவும் அறிவித்திருந்தது.

எனினும் கொரோனாத் தொற்றின் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளை மூடுகின்ற அதிகாரம் அந்தந் தப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அரசின் அறிவிப்பு இருந்தது.

இவ்வறிவிப்பு வெளியாகி 24 மணி நேரத்துக்குள் அந்தத் தீர்மானத்தை மாற்றி, எதிர்வரும் 30ஆம் திகதிவரை நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளுக்கு விசேட விடுப்பு வழங்குவதாக அரசின் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இங்குதான் அரசாங்கம் தீர்மானங் களை எடுப்பதில் மிகப் பலவீனமாக இருக் கிறது என்பதை உணர முடிகின்றது.

அதிலும் பாடசாலைகளை மூடுகின்ற அதிகாரத்தை அதிபர்களுக்கு வழங்குவது என்ற அரசின் தீர்மானம் நகைப்புக்குரியதாகும்.

பாடசாலையின் எந்த விடயத்திலும் தனித்துவமாகத் தீர்மானம் எடுக்கின்ற ஆளுமையை அதிபர்கள் இழந்து பல வருடங்களாகிவிட்ட நிலையில், ஓர் அதிபர் கொரோனாவுக்காகப் பாடசாலையை மூடுதல் என்ற தீர்மானத்தை எடுக்க முடியுமா? அவ்வாறு எடுத்தால் – எடுக்காமல்விட்டால் அதற்கான விமர்சனங்கள் எவ்வாறாக அமையும் என்பதெல்லாம் தெரிந்த விடயம்.

நிலைமை இதுவாக இருக்கையில், பாடசாலைகளை மூடுகின்ற அதிகாரத்தை அதிபர்களிடம் வழங்குவதென்ற அரசின் அறிவிப்பு அப்பாவி அதிபர்களை நடுங்க வைத்தது.

ஏதோ! கடவுள் காத்ததுபோல தான் எடுத்த தீர்மானத்தை அரசாங்கமே மாற்றியமைத்துக் கொண்டதால், அதிபர்கள் தப்பித்துக் கொண்டனர்.

ஆனாலும் அரசாங்கம் எடுக்கின்ற தீர்மானங்கள் தளம்பல் நிலையில் இருப்பது நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல.

# கொரோனா அதிகரிப்பின் எதிரொலி; தப்பியோடும் இந்திய செல்வந்தர்கள்

(டில்லி)

இந்தியாவில் கொரோனாத் தொற்று வெகுவாக அதிகரித்துள்ள பின்னணியில், அந்த நாட்டிலுள்ள செல்வந்தர்கள் தமது குடும்பத்தாருடன், தனி விமானங்களில் இந்தியாவை விட்டு வெளியேறி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள மருத்துவமனைகளில் நிலவிவரும் ஒட்சிசன் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால், பாரிய நிதியை செலவிட்டு, அந்த நாட்டு செல்வந்தர்கள் வேறு நாடுகளுக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி, இவர்கள் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, பொலிவுட் நடிகர்களும் தனி விமானங்களினூடாக வெளிநாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளதாக அந்த நாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் நேற்று முன்தினம் மாத்திரம் 3 இலட்சத்து 52 ஆயிரத்து 991 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகியிருந்ததுடன், 2 ஆயிரத்து 500ற்கும் அதிகமான கொவிட் மரணங்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இதுவரை பாதிக்கப்படாத மாவட்டமாக கிளிநொச்சி

## அரச அதிபர்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டம் தற்போது வரை கொரோனா பாதிப்பிலிருந்து பாதுகாப்பான மாவட்டமாகவே இருக்கிறது.

எனவே இந்த நிலைமையினை தொடர்ந்தும் பேணுவதற்கு பொதுமக்கள் சுகாதார பிரிவினரின் ஆலோசனைகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுந்தமானமாக மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் கிடைக்கப்பெறுகின்ற முடிவுகளின்படி மாவட்டத்தைச் சேர்ந்த எவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாக இல்லை.

எனவே மாவட்டம் ஓரளவுக்கு பாதுகாப்பாகவே உள்ளது. இருப்பினும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் நடந்து கொள்வதோடு, சுகாதார துறையின் ஆலோசனைகளின் படியும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்தார். (5-4-350)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நடுக்குடத்தனை, பொற்பதி வெள்ளை வீதி- உடுப்பிட்டி சந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், மகாறம்பைக்குளம், சமணங்குளம், குழுமாட்டுச் சந்தி, மறக்காறம்பளை- கணேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, கஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# பிரதேச சபையை மூன்றாக பிரிக்க நடவடிக்கை

(முறிகண்டி)


கரைச்சி பிரதேச சபையினை மூன்றாக பிரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையைக் கிளிநொச்சி நகர சபையாகவும், கரைச்சி மற்றும் கண்டாவளையைப் பிரதேச சபைகளாகவும் மூன்றாக பிரிப்பது தொடர்பில் முன்மொழியப்பட்டது

அதற்கு அமைவாக குறித்த கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக பொதுமக்களின் கருத்துக்களை உள்ளடக்கிய கள ஆய்வினைச் சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டிருந்தார். (5-4-100)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ஸ்ரீராமகிருஷ்ணர் மறுபடியும் கேட்டார்: 'உனக்குக் குழந்தை குட்டி இருக்கிறதா?'

ம-வின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. பயந்து கொண்டே, 'ஆம் சுவாமி, எனக்குக் குழந்தை இருக்கிறது' என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் குருதேவர், ஏதோ கேட்க விரும்பாததைக் கேட்டதுபோல், 'ஐயோ, இவனுக்குக் குழந்தையும் இருக்கிறதாமே!' என்று திகைப்புடன் கூறினார்.

ம- நிலைகுலைந்து போனார். அவருடைய அகங்காரம் தூள்தூளாகத் தொடங்கியது.

சில விநாடிகளுக்குப் பிறகு குருதேவர் ம-வை அருள் கனியப் பார்த்து அன்புடன் கூறினார்:

'இதோ பார், உன்னிடம் சில நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. நெற்றி, கண்கள் முதலியவற்றைப் பார்த்து என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதிருக்கட்டும். உன் மனைவி எப்படிப்பட்டவள் வித்யா சக்தியா, அவித்யா சக்தியா?'

ம-: 'சுவாமி, அவள் நல்லவள், ஆனால் அஞ்ஞானி.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தடை விதித்திருந்தால் ஆபத்து ஏற்பட்டிருக்காது

## இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**தொடர்ச்சியாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது தொடர்பில் அலட்சியம் காட்டினால் கடுமையான கட்டுப்பாடுகளை பிரயோகிக்க நேரிடும் என கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**



இக்காலங்களில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் நிலையில், பொதுமக்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது முக்கியமென்றும் அவர் தெரிவித்தார்.


அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர்,

கடந்த புத்தாண்டு விடுமுறை காலத்தில் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடைகளை மேற்கொண்டிருந்தால் மக்கள் சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அநாவசியமான பயணங்களை தவிர்த்திருக்க வாய்ப்புண்டு.

அதேவேளை, சமய மற்றும் சுற்றுலா பிரதேசங்களில் மக்கள் அதிகளவில் கூடியுள்ளமையும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் மே 31ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதார அமைச்சினால் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 4 மாத குழந்தைக்கும் தொற்று



(ஹற்றன்)

நுவரெலியா- பொகவந்தலாவ கிவ் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதில் 4 மாத குழந்தை ஒன்றும் 7 வயது சிறுவன் ஒருவரும் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளதாவது,

"குறித்த அனைவரும், ஏற்கனவே தொற்றுக்குள்ளான குடும்பத்தின் தந்தையுடன், நெருங்கிய தொடர்பை பேணியதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா:70செவ் 7 சூரி6 இல் உயரம்:5'5" தகைமை/தொழில்: **A/L, Royal Mail (London)** எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண், வெளிநாட்டில் வேலை செய்பவராக இருத்தல் நன்று. உள் நாடு.வெளிநாடு. தொ.இ: B/11809 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: சுவாதி கி.பா: செவ் 10சூரி3 இல் உயரம்:5'3" தகைமை/தொழில்:. **A/L, L.L.B** எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில், உள்நாடு மட்டும் தொ.இ:G/11810 |
| பிறப்பு:1992 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: **48 ¾**செவ் 7 சூரி 9 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:**O/L, Driver** எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் தொ.இ: B/11812 | பிறப்பு:1993இந்து நட்சத்திரம்:மூலம் கி.பா:செவ் 12 சூரி 11 இல் உயரம்:5'4" தகைமை/தொழில்: பல்கலைக்கழக பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில் விரும்பத்தக்கது. உள்நாடுமட்டும் தொ.இ:G/11811 |
| பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்:அவிட்டம் கி.பா: செவ் 8 சூரி12 இல் உயரம்:5'9" தகைமை/தொழில்: **A/L.பிரான்ஸ் PR** உண்டு. எதிர்பார்ப்பு:உள்நாடு சாதரண படித்தபெண் தொ.இ: B/11813 | பிறப்பு:1996இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா:8செவ் 11 சூரி 10 இல் உயரம்:5'4" தகைமை/தொழில்:**B.B.A**பட்டதாரி, யாழ். பல்கலைக்கழக அரச உத்தியேகம் எதிர்பார்ப்பு:படித்த நல்லொழுக்கமுள்ள பெண், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும் தொ.இ:G/11814 |
| பிறப்பு:1996 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம் கி.பா: -செவ் 9 சூரி 12இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்:**Undergraduate Aircraft Maintenance.** எதிர்பார்ப்பு:படித்த மணமகள் தொ.இ: B/11815 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்:மிருகசீரிடம் கி.பா:**28 ½** செவ்.சூரி 1இல் உயரம்:5'2" தகைமை/தொழில்: **A/L** எதிர்பார்ப்பு: உத்தியோக மணமகன், உள்நாடு மட்டும். தொ.இ:G/11816 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 அ[illegible]


# பொருளாதாரத்தை மேம்படுத்த தேசிய பாதுகாப்பு அவசியம்

## என்கிறார் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மாத்திரம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். அது பலவீனப்படுத்தப்பட்ட காரணத்தினால் 30 வருட கால சிவில் யுத்தமும், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலும் நாட்டில் இடம்பெற்றது.

தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும் என நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டதால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது. அத்துடன் சிவில் யுத்தம் 30 வருட காலம் வரை நீடித்தது.

இதனால் இரு தரப்பிலும் பாரிய விளைவுகள் தோற்றம் பெற்றன.

2005 ஆம் ஆண்டுக்கு பிறகு பாரிய போராட்டத்திற்கு மத்தியில் 30 வருட கால யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கவில்லை. பல்வேறு காரணிகளினால் அது பலவீனப்படுத்தப்பட்டது.

இதன் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது என சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-4)

# தூதுவரை ஏற்க மறுத்ததால் முடிவை மாற்றியது இலங்கை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் கனடாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்ட போதிலும் அவருக்கான அனுமதியை கனடா வழங்காத காரணத்தால் அவரை இத்தாலிக்கான் தூதுவராக நியமித்துள்ளது இலங்கை.

இதற்கான அனுமதியை பாராளுமன்ற உயர்சபை வழங்கியுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒட்டாவாவுக்கான தூதுவராக சுமங்கள டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவரை ஏற்பதற்கான அனுமதியை வழங்குவதில் கனடா பின்னடித்து வந்தது. இந்த நிலையிலேயே அவர் இத்தாலியின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சவுதிக்கான இலங்கையின் தூதுவராக கடந்த நவம்பர் மாதம் அகமட் ஏ. ஜவாத் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் அந்தப் பதவியை ஏற்காத காரணத்தால் பி.எம். அம்ஷா சவுதிக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பல்கலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்றாளர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் சாவகச்சேரி வைத்தியசாலை, மன்னார் வைத்தியசாலை, வவுனியாவில் பூவசராங்குளம் வைத்தியசாலை ஆகிய மூன்று வைத்தியசாலைகளுக்கும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்ற மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-3,18,33)

## பதின்ம வயது...

இந்நிலையில் குறித்த சிறுமியின் பெற்றோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து குறித்த இளைஞனும் சிறுமியும் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 வயது சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-3,281)

## அனைத்து...

துள்ளார்.

இதற்கு அமைய எதிர்வரும் 30ஆம் திகதி வரை அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் பாடசாலைகளைத் திறக்கலாமா? இல்லையா? என்ற முடிவை மறு ஆய்வு செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மரத்திலிருந்து...

(வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 17ஆம் திகதி தடி வெட்டுவதற்காக பூவரச மரம் ஒன்றில் ஏறியுள்ளார்.

இதன்போது கால் சறுக்கியதில் அதில் இருந்து கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரனை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## காதல் விவகாரம்...

கடந்த 25ஆம் திகதி கரணவாய் பகுதியில் நடந்த இந்த சம்பவத்தில் 14 வயதான சிறுவனும் தாயாருமே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர்.

தகவலறிந்த நெல்லியடி பொலிஸார் விரைந்து செயற்பட்டு நேற்றைய தினம் அதே பகுதி வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவனை மீட்டனர்.

சிறுவனின் சகோதரியும் அவரது காதலனும் எங்கே எனக் கேட்டு சிறுவன் தாக்கப்பட்டிருந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாயாரை நெல்லியடி நகரத்தில் இறக்கி விட்டுவிட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட பெண்ணின் மகள் ஒருவரை காதலித்திருந்த நிலையில் இருவரும் அண்மையில் தலைமறைவாகினர். அவர்களின் இருப்பிடத்தை கேட்டே தாயும் மகனும் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,60)

## யாழ்.மாவட்ட...

அங்கு தொடர்ந்துரைத்த அவர்,

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்பட்டுள்ள போதிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லையெனச் சாடிய அவர், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளதெனவும் கூறினார்.

ஏனைய மாவட்டங்களில் உள்ள சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர்,

ஆனால் அவ்வாறானதொரு நிலைமை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்னும் ஏற்படவில்லையெனவும் அவ்வாறானதொரு நிலை ஏற்படும்போது, நிச்சயமாக முடக்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படலாமெனவும் கூறினார். (ம-3,33)

## இலங்கையை...

பதிவான 'அதிகூடிய' தொற்றாளர் எண்ணிக்கையாகும்.

மேலும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்றுவரை 1 லட்சத்து 3 ஆயிரத்து 487 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## சுன்னாகத்தில்..

சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான வேலாயுதப்பிள்ளை அற்புதராசா (வயது-78) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் கடந்த 19ஆம் திகதி சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்பி விட்டு வெளியேறும் போது பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## உருமாறும்...

தன்மையை கொண்டவையாக இருப்பதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மரபணு உயிரியல் விஞ்ஞான ஆய்வுப் பிரிவின் பிரதானி கலாநிதி சந்திம ஜீவசுந்தர தெரிவித்துள்ளார்.(ம-3)

## இலங்...

கொரோனா தொற்றின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பிரதி நிதிகள் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கொழும்பில் வைத்து நேற்றையதினம் சந்தித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபின், பிரான்ஸ் தூதுவர் ரீட்டா குலியானா மாநெல்லா, ஜேர்மன் தூதுவர்ஹோல்கர் சூபர்ட், ரோமெனியாத் தூதுவர் விக்டர் சூடியா உட்பட பல்வேறுமட்ட வெளி நாட்டு இராஜதந்திரிகள் இந்த அழைப்பை ஏற்று எதிர்க்கட்சித் தலைவரது உத்தியோகபூர்வ அலுவலகத்திற்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

சுமார் ஒரு மணிநேரத்திற்கும் அதிகமாக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு சவாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறிக்கும் அளவிற்கு அரச அடக்குமுறை கையாளப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட முக்கிய ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## யாழில் இரு...

வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞன் மீது சரமாரி வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று காலை குறித்த இளைஞன் தோட்டத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பியுள்ளார்.

வழிமறித்த ஒருவர் இளைஞன் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றிருக்கின்றார்.

சம்பவத்தில் க.ததுர்சன்(வயது-25) என்ற இளைஞன் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.புத்தூர் - மந்திரிமனை கிராமத்திற்குள் புகுந்த வாள்வெட்டு கும்பல் நடத்திய தாக்குதலில் இருவர் படு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்தவர்களே ஆயுதங்களால் தாக்கியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3,30)


**PHARMACIST'S EXTERNAL EXAMINATION**

**CERTIFICATE IN PHARMACY COURSE**

மருந்தியலாளர் வெளிவாரி பரீட்சைக்குரிய வகுப்புக்கள் தற்போது ONLINE இல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த பரீட்சைக்கான குறைந்தபட்ச தகுதி A/L பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் இரசாயனம் (Chemistry) உட்பட மூன்று பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

CERTIFICATE IN PHARMACY ஆறு மாத கற்கைநெறி MAY மாதத்தில் இருந்து online இல் திங்கட்கிழமை இரவு 6.30 - 9 மணி வரை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளோம்.

மேலதிக தகவல்களுக்கு:- நேரு sir 077 316 4251 அல்லது WhatsApp 077 625 6292 இல் தொடர்பு கொள்ளலாம். (6727)

தன நிதானய — திகதி - 2021.04.27 — சீட்டிழுப்பு இலக்கம் - 501 — Q 14 45 68 75

கொவிசெத — சீட்டிழுப்பு திகதி 27.04.2021 — சீட்டிழுப்பு இலக்கம் 2759 — Z 33 59 64 71

மஹஜன சம்பத — திகதி 2021/04/27 — சீட்டிழுப்பு இலக்கம் 4464 — H 8 7 2 0 0 4

சுபிரி வாசனா — சீட்டிழுப்பு திகதி 2021/04/27 — சீட்டிழுப்பு இலக்கம் 1593 — 10 — 15 36 42 50

மெகா பவர் — திகதி 27/04/2021 — சீட்டிழுப்பு இலக்கம் 0822 — I 09 32 36 42 70

அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 1260 — வர்ணம்: இள நீலம் — சீட்டிழுப்பு திகதி: 27.04.2021 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 131,322,290 — 07 23 32 68 S

சனிதா — சீட்டிழுப்பு இல: 3590 — வர்ணம்: இள நீலம் — சீட்டிழுப்பு திகதி: 27.04.2021 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,791,719 — 30 39 63 75 O

சுப்பர் ஜக்பொட் 4,316,470/= — வெற்றி இலக்கங்கள் 01 26 48 50 — திகதி: 27.04.2021 — வெற்றி வாரம்: 3141 — வர்ணம்: சிவப்பு — ரூ. 11,256,900

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1434 — நிறம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 27/04/2021 — தினம் செவ்வாய்க்கிழமை — Q 03 30 41 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 53,645,555/=

718 — 27.04.2021 — செவ்வாய் — U 11 34 35 40 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,665,000 — தொ.பே: 0112 333 546/47 — Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புத்தம் புதிய பதிவு செய்யப்படாத TVS
முச்சக்கரவண்டிகள்
விற்பனைக்கு உண்டு.
( குறைந்தளவு கையிருப்புக்கள் மாத்திரமே. )
(C-2051)

077 715 1101, 077 129 0712



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## சோமாஸ்கந்தனின் வாழ்த்து




திரு.
**சிவஞானம் ரவிச்சந்திரன்**
( SLPS - 1 )
( B.Sc, PGDE, PGDEM )

சேவைக் காலம்
09.01.2020 - 27.04.2021

எமது கல்லூரியில் நான்கு மாதம் பதில் அதிபராகவும் தொடர்ந்து பிரதி அதிபராகவும் கடமையாற்றிய **திரு. சிவஞானம் ரவிச்சந்திரன்** அவர்கள் SLPS 1 பதவியுயர்வு பெற்றமைக்கும் இன்று ( 28.04.2021 ) புதன்கிழமை யா / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திற்கு அதிபராக பதவியுயர்வு பெற்றுச் செல்வதாலும் அவருடைய சேவை மென்மேலும். சிறக்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக் கழகம்
யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
(C-2052)


## பெங்களூர் வெற்றி





## பழைய கேற் தேவை

நல்ல நிலையில்
உள்ள
பழைய கேற்
( 10, 11, 12 அடி )
தேவை.

078 423 9984



## தேவை

யாழ். திருநெல்வேலி, பலாலி வீதியில் உள்ள எமது கட்டடத்திற்கு சிறந்த முறையில் பெயின்டிங் செய்யக் கூடியவர்கள் தேவை. (6724)

☎ -077 105 6694



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-2005)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com



## சோ(f)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6698)

077 224 2787



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2004)

0768226240 DHL



அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2006)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


## மரண அறிவித்தல்



### சின்னத்துரை சுந்தரலிங்கம்

பிறப்பு : 19.10.1956
இறப்பு : 18.04.2021

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் கடந்த 18.04.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சுபத்திரை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவச்செல்வத்தின் அன்புக் கணவரும் டினேஸின் அன்புத் தந்தையும் பூபாலசிங்கம், வேல்முருகன், ரகுபதி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரமலர், மாலினி, குணரஜனி, பசுபதி, ஜெயகாந்தன், தவசெல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலசந்திரன், கருனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் கிருபாகரன், துஷியந்தினி ஆகியோரின் சித்தப்பாவும் ரஜீத், சஞ்ஜீ, நிசோபிதா, சாரங்கி, ஜெனாங்கி, பைரவி, ராகவி, வினோஜி, சினோஜி ஆகியோரின் பெரியப்பாவும் நித்யா, பியந்தினி, பிரதீப், நிருபன், சியாமளா, தீசன், சயந்தா, திலீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பூயிதா, லிவியா, நேருசா, கவிசாந், பர்சாந், டிலக்ஷன், சமீத், மகிஷா, திசாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6673)

பண்டத்தரிப்பு
076 650 7850
077 878 7205
தகவல்:-
மகன் (S. மகேஸ்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
29
08
1951



இறப்பு
30
03
2021

அமரர்
### திருமதி யோகேஸ்வரி இராஜேந்திரம்
( ஓய்வுநிலை ஆசிரியை )

திதி நிர்ணயவெண்பா
அனைவரையும் அன்புடன் நேசித்த நீ
இன்று அணைந்த விளக்காய் ஆனதேன்?
எத்தனை காலம் சென்றாலும் - உன்
நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

கடந்த 30.03.2021 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்திய எமது அன்புத் தெய்வம் திருமதி **யோகேஸ்வரி இராஜேந்திரம்** அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை (29.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியை நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (C-2050)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.